www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-SEINE ; FRANCE

# தூண்டில்



TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 30

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொய்மைக்குள் வாழ மறுப்போம்!

"மரணத்துள் வாழ்வோம்" ஆம்! இது எமது போராட்டம் சிறிலங்கா இராணுவ ஒடுக்கு முறைக்குள் உட்பட்டிருந்தபோது ஈழக் கவிஞர்கள் பலரின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த ஒரு கவிதைத் தொகுப்பின் தலைப்பாகும்.

இன்று எமது மக்களின் வாழ்நிலையை ஊன்றிக் கவனிப்பவர்கள் எவரும் இந்தத் தொகுப்பின் தலைப்பு எமது இன்றைய சூழ்நிலைக்கு மிகப் பொருத்தமானது என்பதைப் புரிந்துகொள்வர். நம்மைச் சுற்றி நடப்பவைகள் யாவும் இன்று எம்மை வெறும் பொய்மைக்குள் வாழ வைத்துக்கொண்டிருக்கின்றன.

உண்மையில் எமது போராட்டத்தில் எத்தனையோ தியாகங்களுக்கூடாகவும், எத்தனையோ அழிவுகளுக்கூடாகவும் நாமிந்தக் கட்டத்தினை வந்தடைந்துள்ளோம். இத்தனை தியாகங்களுக்கூடாக நாம் இன்று பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறப்படும் விடுதலை என்பது எத்தகையது?

இன்று அதிகாரத்தை கையிலேந்தியுள்ள தலைவர்கள் எத்தகையவர்கள்?

அவர்கள் காட்டும் அரசியல் பாதை எத்தகையது?

இவை இன்று உண்மையைத் தேடும் எவரது மனதிலும் எழும் கேள்விகளாகும்.

ஆனால் இவை இன்று கேட்கப்படக் கூடாதவைகளாகும். கேட்டால் நீங்கள் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்படுவீர்கள். கேட்டால் நாம் "மரணத்துள் வாழ்வோம்".

இன்று உங்கள் உயிரைப் பறிக்கும் அதிகாரம் பச்சைப் பாலகர்களின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அப் பாலகர்களின் சிந்தனைசக்தியும், வாழ்க்கை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துண்டுப்பிரசுர வடிவில், அனுப்பியவர் விபரம் இல்லாது, இலங்கையிலிருந்து எமக்கு அனுப்பி வைக்கப்பட்டதை இங்கு பிரசுரித்துள்ளோம்.

இலங்கையில் ஜனநாயகம் கட்டியமைக்கப்படுவதில் அக்கறையுள்ள அனைவருக்கும் இத் துண்டுப்பிரசுரத்தை பிரதி செய்து விநியோகிக்கும்படியும், இது இலங்கையில் வடக்கு, கிழக்கில் வாழும் 'மௌனமாக்கப்பட்டோரின் குரல்' என்றும் இப் பிரசுரத்தை எமக்கு அனுப்பி வைத்தவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

— கடலோடிகள்

---

யின் முழு அர்த்தமும் அவனின் கழுத்திலே தொங்கும். சய னைட் வில் லையினுள் இறுக்கப்பட்டுள்ளது அப் பாலகர்கள் செய்யும்கொலைகள் ஒவ்வொன்றையும் நியாயப்படுத்தவும், உரிமை கோரவும், மறுக்கவும் போலிப் பட்டங்களுடன் தமது சய வாழ்வை வளமாக்க நாட்டைவிட்டு ஓடிய பலர் இன்று இங்கு பெரும் பேச்சாளர்களாகப் பவனி வருகிறார்கள். இவர்கள் தமது அழிவு அரசியலை இங்கு நடத்துவதற்கும், தம்மைத் தவிர மக்களைப் பற்றிப் பேசும் எவரையும் துரோகிகளாக்கிக் கொன்றொழிப்பதற்கும் ஏதும் அறியா இளம் சந்ததியைச் சிந்திக்க முடியாத இயந்திரங்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களை முதுகெலும்பற்றவர்களாக்கி தமது துப்பாக்கித் துரைத்தனங்களை முன் தள்ளும் சர்வதேச உளவு ஸ்தாபனங்களின் செல்லப்பிள்ளைகளான இவர்கள் தமது சுடுகாட்டுச் சாம்ராஜ்ஜியத்தில் உண்மை தேடும் மக்களின் மண்டை ஓடுகளால் சிம்மாசனம் அமைத்து ஆட்சி செய்ய பாதையமைத்துச் செல்கிறார்கள். 'மக்கள் எம் பக்கம்' எனக் கொக்கரிக்கின்றார்கள். இதுதான் எமது அரசியல் கலாச்சாரம் என பறைசாற்றுகிறார்கள்.

பாவம் நாங்கள்!

என்ன செய்வோம். மரண பீதியில் உண்ணுவதும், உறங்குவதுமே வாழ்க்கை என்ற நிலையில் செய்வதறியாதவர்களாக-ளாகி நிற்கின்றோம். நடுநிசியில் எமது அயலவர்கள் கடத்திச் செல்லப்படுவதையும், சின்னஞ்சிறார்கள் மீது ஆயுதங்கள் திணிக்கப்படுவதையும், இரகசியமாக நடைபெறும் நூற்றுக் கணக்கான கொலைகளையும் கண்டும் காணாததுபோல், கேட்டும் கேளாதது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போல் வாழப் பழகிக்கொண்டு விட்டோம். நம்மை யார் கேட்டாலும் இப்போது சுமுகமான சூழல் நிலவுகின்றது எனக்கூறி எமது வாழ்நிலையை நியாயப் படுத்தப் பழகிவிட்டோம். தலைக்கு மேலே வெள்ளம் ஏறிவிட்டது. இனிச் சாண் ஏறி என்ன ? முழம் ஏறி என்ன? என்று விட்டு விட்டு மௌனமாய் பொய்மைக்குள் வாழப் பழகிவிட்டோம்.

எமது சமூகத்தினுள் இருந்தே உருவெடுத்த, எம்மையறியாது நாமே வளர்த்துவிட்ட பயங்கரவாதம் இன்று பூதாகரமாக உருவெடுத்து வெறும் கைகளுடன் வலுவிழந்துபோய் நிற்கும் மக்கள் மீது இன்று ஒருவித ஒழுங்கை, கட்டுப்பாட்டை, ஐக்கியத்தை, ஸ்திர சமூக நிலையைக் கொண்டுவந்துள்ளதாக மேம்போக்காகத் தோன்றினும், இதன் உண்மையான பின்னணி மரணப் பீதியுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

எம்மைப் பொய்மைக்குள் வாழ வைத்தது மட்டுமன்றி எமது தலைவர்கள் என்று கூறுவோர் வாயிலிருந்து கூச்சமில்லாமல் பொய்யும், புரட்டும் வந்து விழுந்துகொண்டிருக்கின்றன செய்யும் கொலையை இலாபமில்லாவிட்டால் மறைப்போம், செய்யாதவற்றை இலாபம் இருந்தால் ஏற்போம். மக்கள் சாவதால் இலாபம் இருந்தால் மக்களையும் கொல்வோம். அப்படியானதொரு உயர்ந்த தத்துவமும், கொள்கையும் கொண்டவர்கள் எமது தலைவர்கள்.

இத் தலைவர்களில் ஒருவர் அண்மையில் சொன்னார் "முழு உலகிற்குமே வழிகாட்டும் வெறி கொண்டவர்கள் நாங்கள்" என்று ஆம்! உண்மை மனித நாகரிகம் தலைகுனியும் வண்ணம் கொலை செய்யும் முறைகளை நாம் உலகிற்குக் காட்டமுடியும். செய்த கொலையை பச்சையாக மறைக்கும் முறையை உலகிற்குக் காட்டமுடியும். ஏன் சிலவேளை முழு உலக மக்களுமே சயனைட் அருந்திச் சாவதுதான் அதி உத்தமமான தியாகம் என்றுகூட இவர்கள் உலகிற்கு 'வழிகாட்ட முடியும். இப்படி ஒரு உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு வழங்கிய பெருமை எமது சமூகத்திற்கு இன்று வந்தாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

மக்கள் தமது வாழ்க்கையின் பெறுமானமிழந்து வெறும் மரக்கட்டைகளாக வாழ கட்டாயப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை, எமது சமுதாயம் பதவி வெறியர்களினதும், சுயநலக் கும்பல்களினதும், தமது போலிக் கௌரவங்களைப் பாதுகாப்பவர்களினதும் கோட்டையாக மாறி வருகிறது. உண்மையைத் தேடுபவர்களும், மக்களை நேசிப்பவர்களும் அலாதி மௌனத்துடன் தமது நாளாந்தக் கடமைகளில் எதுவித விருப்புவெறுப்புமற்று ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் எமது பிள்ளைகளோ இந்தக் கொலைகாரத்த

www.tamilarangam.net

லைவர்களின் பின் அங்கிகளைக் கைப்பற்றி இயக்க மரபு என்ற போர்வையில் கழுத்தில் தொங்கும் சயனைட் மாலைகளுடன் ஒளிமயமான எதிர்காலத்தை காணவென்று நடைபோடுகிறார்கள். எதிரியிடமிருந்து இயக்கத் தலைவர்களையும், இரகசியங்களையும் காப்பாற்ற சயனைட் அருந்திச் சாகவேண்டும் என்ற பலவீனமான மனநிலைக்குத் தள்ளப்பட்ட அப்பாவி ஆட்டுக்குட்டிகளாக மாறியுள்ளார்கள். சயனைட் அருந்தாமல் எதிரியின் முகாமினுள் உயிருடன் வாழலாம். சயனைட் அருந்தாவிட்டால் தனது இயக்கமே தன்னைத் தண்டிக்கும் என்னும் குரூர தத்துவத்தின் கீழ் காலம் தள்ளுகிறார்கள்.

இவர்களுடைய தாரகமந்திரங்களான விடுதலை வீரர்கள் துரோகிகள் போன்ற பதங்களின் பின்னால் உள்ள பொய்மை-யான அர்த்தங்களை நாம் கண்டுகொள்ளவேண்டும்.

ஒரு காலத்தில் இந்தியாவோடு தாம் கூடிக் குலாவிய-தையும், அவர்களின் உளவு ஸ்தாபனங்களின் ஆலோசனை கேட்டதையும், அவர்கள் தம்மை ஏமாற்றியதையும் இவர்கள் துரோகமாகக் கொள்ள மாட்டார்கள். அது வீரமறவர்களின் ராஜதந்திரம். இன்று தங்களின் தேவைக்காக பிரேமதாசவின் அரவணைப்பில் குளிர்காயும் இவர்கள் அரசாங்கம் செய்யும் சகல கொலைகளையும் கூட கண்டும் காணாதது போல் இருக்கும் வீரர்கள் இவர்கள்.

இவர்கள் எந்த சக்தியோடும் கை கோர்க்க எந்நேரமும் தயாராய் இருப்பார்கள். அது பாசிசமா, உளவு ஸ்தாபனமா, மேலாதிக்க சக்தியா எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை அல்லது அந்த சக்திகள் எமது மக்களின் நலனைக் காப்பாற்றுமா என்றும் கூட பார்ப்பது இல்லை. மாறாக இவர்கள் பார்ப்பதெல்லாம் அந்த



பிள்ளைப்பேறு வாட்டுக்கு வெளியாலை கொஞ்சப் பேர் ஆயுதங்களோட நிக்கிறாங்கள். என்ன சங்கதி?

தங்கடை எதிரியின்ரை மனிசிக்கு இன்டைக்குப் பிள்ளைப் பேறாம். எதிரியின்ர வாரிசையே உயிரோடை விட்டு வைக்கக் கூடாதாம் என்டு சொல்லி, பிள்ளை பிறந்த உடனேயே சாக்காட்டுறதுக்கு வந்து நிக்கிறாங்கள்

– விமல்

www.tamilarangam.net

சக்தி தங்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளுமா, தங்களை அதிகாரத்தில் இருத்துமா என்பதுதான். அப்படி இல்லாவிட்டால் இவர்கள் முரண்டு பிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். உடனே கத்தவும் ஆரம்பித்துவிடுவார்கள்.

ஏனையோர் எல்லாம் துரோகிகள். தம்மைத் தவிர ஏனையோர் எல்லோரும் துரோகிகள்.

நாம் ஒன்றை மறக்கக் கூடாது. அன்று துரையப்பா மட்டும்தான் துரோகி. இன்று தமிழ் மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் துரோகிகள். உலகெங்கும் தமிழருக்கு துரோகிகள் நிறைந்துபோய்விட்டனர்.

இவர்களது கொடூரமான அழிவு அரசியல் ஆக்கபூர்வமாக செயற்பட முற்பட்ட சக்திகளை கையாலாகாதவர்களாக்கி, விரக்திக்கும் பழிவாங்கலுக்கும் தள்ளின. தமிழ் மக்களின் நலனிற்கு எதிராகவும் செயற்படவைத்தன ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்களையே வெட்டிக் - கொல்லவும், சுட்டுப் பொசுக்கவும் வழிகோலின.

இதுதான் இவர்களின் வரலாற்றுச் சாதனை.

நாங்கள் இந்தப் பொய்மையான நிலைக்குள்தான் தொடர்ந்தும் வாழப் போகின்றோமா?

மக்களே !

"ஊமைகள் வாழும் ஊரிலே உளறுவாயன் பேச்சாளி" என்று ஓர் பழமொழி உண்டு. அதுபோல் ஆகிவிட்டது எம் கதை மக்களையும், மக்களை நேசிப்பவர்களையும் துப்பாக்கிமுனையில் ஊமைகளாக்கிவிட்டு உளறுவாயர்கள் பேச்சாளர்களாகிவிட்டார்கள். திறமையுள்ள ஏனையோர்களை அழித்து ஒழித்துவிட்டு தாமே அதி திறமைசாலிகள் எனக் காட்டிக் கொள்கிறார்கள். துப்பாக்கி முனையில் மக்களை ஊமைகளாகவும், குருடர்களாகவும் செவிடர்களாகவும், முடவர்களாகவும் மாற்றி வைத்திருக்கும் இவர்கள் ஒட்டுமொத்தமாக மக்களை அங்கவீனர்களாக மாற்றிவிட்டார்கள்.

ஆனால் இவர்களோ எம்மையும், எமது சிந்தனை அனைத்தையுமே தமது துப்பாக்கிகளுக்கும் சயனைட்டுகளுக்கும் கீழ்ப்பட்டதாக நினைக்கிறார்கள். எமது சமுதாயத்தையும் எதுவித ஆக்க சக்தியுமற்ற மலட்டு சமுதாயமாக்க விளைகிறார்கள்.

இன்று பொய்மையான வாழ்வு ஸ்திரமடைந்து நாம் பதட்டத்துடன் ஒரு வித பீதியுடனை பயங்கரச் சூழ்நிலையின் கோரப் பிடியினுள் திக்கித் திணறுவது தொடருமா?

அல்லது திரும்பவும் எம் மீது வெறிகொண்ட இராணுவ அட்டகாசம் அவிழ்த்துவிடப் படுமா? என்ற நிலையற்ற நிகழ்

www.tamilarangam.net

காலத்தையே நாம் எதிர்நோக்குகின்றோம்.

ஆனால் இவை பற்றி நாம் இன்று வெளிப்படையாக எதுவும் பேசமுடியாது. பேசினால் எமது மூச்சு நிறுத்தப்படும். நாம் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடுவோம்.

நாம் வெளிப்படையாக உண்மைக்குள் வாழமுடியாது! ஆனால் எமக்குள்ளேயே பொய்மைக்குள் வாழ்வதை மறுக்கமுடியும்.

ஆகவே இன்று நாம் செய்ய வேண்டியது என்ன?

ஆம், நாம் சிந்திப்பதுதான். அதற்கு இவர்கள் தடைபோடவோ, வரி விதிக்கவோ முடியாது.

ஆனால் சிந்திக்காத, தனியே சுயநலம் மிக்க ஜடங்களாக எம்மை மாற்ற முடியும். மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையானவற்றை நாம் எமது சிந்தனைக்குள்ளேயே தேடுவோம். ஏன் எமது போராட்டம் அழிந்தது? எமது இளைஞர் சமூகம் ஏன் இப்படிச் சீரழிந்தது? வரலாற்றை உற்று நோக்குவோம்.

வாழ்க்கையின் அர்த்தம் என்பது உண்ணுவதும், உறங்குவதும், குடும்பத்தைப் பேணுவதும் மட்டுமல்ல. அது அதற்கும் மேலானது.

ஆகவே பொய்மைகளைக் கேள்வி கேட்போம். மௌனமாகவே உண்மைகளைத் தேடுவோம்.

சிந்தனை மூலமாக பொய்மைக்குள் வாழ மறுப்பதே எமது போராட்ட வடிவமாக அமையட்டும். உண்மைக்குள் வாழும் காலத்தைத் தேடவேண்டியது எமது பணி.

ஆம், நமது போராட்டத்தில் உயிரிழந்த சகல மக்களின் சமாதி மீது திரும்பவும் உறுதியிட்டுக் கூறுவோம்.

அதற்காகப் போராட வேண்டிய காலம் கனியும். அது வரை,

மௌனமாய் போராடுவோம்!
மனங்களால் இணைந்து கொள்வோம் !
பொய்மைக்குள் வாழ மறுப்போம் !

28.05.90 -விடுதலைப்பாதை

---

இது ஆயுதங்களால் நெரிக்கப்பட்ட தொண்டைகளின் ஈனக்குரல் இதை இயன்றவரை பரவலாக்குவது உங்கள் கடமை.

www.tamilarangam.net

# ...என்று...?

விடிவு! விடிவு!! என்று
விடியலுக்காய் ஏங்கியவர்கள்
விடியும் போதெல்லாம்
சூரியனைக் கடிந்தபடி.. !

எப்படி..?
எம்மவரின் வாய்மொழிகளிலெல்லாம்
நாம் சற்று... வித்தியாசப்பட்டு
கலாச்சாரம் தின்னும்
பேய்களென்றானோம்.

தன்னடிமையைத்
தானுணரும் காலமது.
உற்பத்தியாகிட நாமொரு
உதிரிகளானதாலா
அல்லது... !
சமூக விலங்கொன்றால்
பெண்ணினத்தை மட்டும்
பூட்டத் துடிப்பதை
துடிப்புடன் விளங்கிக்கொண்டதாலா
எது?

சிலவேளை – நாமும்
பேரம் பேசி
வாங்கிய பொருளிற்கு
காலம் முழுதும்
பெரும் சேவை செய்திட
உடன்பட்டிருந்தால்... !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரலாறும் தொண்டு செய்தபடி
மறு உலக மாற்றத்தில்
எம்மைக் கண்ணகியாக்கி
மண்டியிட்டிருக்கும்.

அன்றெல்லாம் தூவப்பட்டன
வர்ண ஊணப் பூக்கள்
இவர்கள்
மயங்கிக் கிடந்ததாலே..!
இப்போதெல்லாம் — எமக்கு
வழங்கப்பட்டபடி — தேசிய பட்டங்கள்
நாம் விழித்தெழுந்ததாலே.. !

முகம் பார்த்து
புன்னகை விரித்ததாலே
புகையிலையுடன் ஒப்பிடப்பட்டு
துயரத்தில்
ஏழு கோயு லை இடித்துரைத்தோமாம்!

எம்மினத்தை நாமே
ஏளனம் செய்யும் ..!
எச்சங்கள் துடைக்கப்பட்டு
என்று..? என்று..?!
நம்மினத்தில் வீசப்பட்ட
அடக்குமுறை சேறுக ளை
கழுவ முனைவோம்.

- கவிஞர்

8வது இலக்கியச் சந்திப்பில்...

"காலத்தின் சுவடுகள் நாடகம் மூலம் நாங்கள் தெரிவிக்க விரும்பியது, தமிழர் கலாச்சாரம் பிழையானது. அதனை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்பதே. ஆனால் இந் நாடகத்தை விமர்சித்த எல்லாச் சஞ்சிகைகளும் கதை எங்கே என்று தேடியிருந்தன.

இந்நாடகம் பற்றித் தூண்டிலில் இடம்பெற்ற விமர்சனத்தில், 'திறமையான கலைஞர்களை கவிஞர் பயன்படுத்தியுள்ளார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளமை எம்க்குப் பெரிய மனவருத்தத்தைத் தந்துள்ளது. நடித்தவர்கள் ஏதோ வலது குறைந்தவர்கள் என்பதுபோல் அது உள்ளது.

காலத்தின் சுவடுகள் நாடகத்தின் கரு பிலபீல்ட் நாடகக் குழுவின் கருத்தே. வசனங்

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்)

www.tamilarangam.net

# மேற்குஜேர்மனி தமிழ்ச் சஞ்சிகைகள், ஆக்கங்களில் பெண்நிலைவாதக் கருத்துக்கள்

அடிமைத்தனங்களின் அதிகரிப்பும், அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்தித் தந்த சூழ்நிலைகளும் இன்று குறிப்பாக மேற்கு ஜேர்மெனியில் எம்மவரிடையே பெண்நிலைவாதக் கருத்துகள் தோன்றக் காரணமாகிவிட்டன.

மேற்கு ஜேர்மெனியில்வெளியாகிக் கொண்டிருக்கும் சஞ்சிகைகள், நாவல், கவிதை, கட்டுரை, சிறுகதைத் தொகுப்புகளில் பெண்நிலைவாதக் கருத்துகள் தாராளமாக இடம்பெறுகின்றன எனக்கூறும் அதேவேளை அவை எப்படிப்பட்ட கருத்துகள் என்ற கேள்வியை அடுத்ததாக முன்வைக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆணாதிக்கத்திற்குச் சார்பாகவும், வரட்டுக் கொள்கைகளையும், மூட நம்பிக்கைகளையும் கலாச்சாரம், பண்பாடு, மதம் என்கிற அடிமை ஆயுதங்களையும் பயன்படுத்தி பெண்களைத் தொடர்ந்தும் அடிமைகளாகவே பேணும் நோக்கத்துடனும் பலஆக்கங்கள் எழுதப்படுகின்றன. இவ்வாக்கங்களுக்கு மாறாக, அடிமைபடுத்தப்பட்டிருக்கும் பெண்களின் அடிப்படைக் காரணிகளை விளக்கி உண்மையான பெண் விடுதலைக்கான வழிமுறைகளைக் கூறுவனவாகவும் ஆக்கங்கள் எழுதப்படுகின்றன.

கவிதைகள்

"கவிதைச் சோலை. 1"
எழுதியவர்: விக்கு பாக்கியநாதன்

**அழகுடன் வளர்ந்த பருவமங்கையும்**
**நால்வகைக் குணத்தின் உந்துதலிலே**
**நாணித் தலை குனிவாள் நிலத்தை நோக்கி**
**மங்கை நல்லாள் தன் மணவாளனே**
**மைவிழி மூடும்வரை தஞ்சமெனவாழ்வாள்**

நெல்லின் சாயல் என்ற இக் கவிதை நால்வகைக் குணங்கள் பெண்ணுக்கு இயற்கையாக அமைந்தது, சாகும்வரை அவள் ஆணுக்கு அடிமையாக வாழவேண்டும் எனக் கூறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது சுயநலன்களுக்காகவும், ஆதிக்கத்தை நிலைநாட்டவும் பெண்களைப் பலவீனர்களாக்கி, இழிவுபடுத்தி எழுதும் ஆண் எழுத்தாளர்களுக்கு நான் ஒன்றும் குறைந்துவிடவில்லை என்பது போல் பெண்களை நூதனம், ஓவியம், ரோஜா மலரினம், கொடியினம், அலையினம், போதையூட்டுவதில் நல்ல மதுவினம் என்று மிகவும் கேவலமாக நூதனம் என்ற கவிதையில் வர்ணிக்கிறார் திருமதி விக்ஞு பாக்கியநாதன்.

## மங்களேசுவரி

"விடுதலை வேண்டுமடி"
(தூண்டில்: கலம்- 24)
எழுதியவர்: ந. சுசீந்திரன்

நால்வகைக் குணங்களாலும், சமையல் அறையிலும், முதலாளித்துவவாதிகளாலும், கலாச்சாரம், பண்பாடுகள், மதங்களாலும் கட்டுண்டு கிடக்கும் பெண்ணினத்திற்கு விடுதலை வேண்டி நிற்கிறது இக் கவிதை.

"இருட்டைப் பிய்க்கும் வெளிச்சப் பறவைகள்"
(புதுமை: இல- 4)
எழுதியவர்: கல்யாணி

அநேகமான பெண்கள் வாய்விட்டுப் பேசப் பயந்து அழுவதன் மூலம் பிரச்சினைகளும் மனவேதனைகளும் விலகிவிடும் என்று எண்ணுகின்றனர்.

மௌனமாக இருந்தது போதும், அழுவதில் அர்த்தமில்லை என்று அவர்களுக்கு உற்சாகமூட்டி வாழ்க்கையை அர்த்தப்படுத்தும்படி கூறுகிறது இக் கவிதை.

"ஓ! விபச்சாரி"
(தூண்டில்: கலம்- 12)
எழுதியவர்: இளஞ்செழியன்

விபச்சாரி என்றால் நடத்தை கெட்டவள்- இது எமது சமுதாயத்தின் பார்வை. ஒருபெண் விபச்சாரியாக்கப்படுவதற்கான காரணங்களை வர்க்க ரீதியாக நோக்கும் இளஞ்செழியன் விபச்சாரியை ஓர் உழைப்பாளியாக இனங்காட்டுகிறார்.

இவற்றைவிட சுபாஜினி, நா. நிருபா, சிகப்பன், வண்டு, சிவம், சேரன் ஆகியோரின் பல கவிதைகளும் சிந்திக்கத் தூண்டும் பல நல்ல கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளன.

கட்டுரைகள்

"தாலி அடிமைச் சின்னமா?"
(நமது குரல்: வெளியீடு- 16)
எழுதியவர்: விக்ஞு பாக்கியநாதன்

"நான் உனக்குப் பாதுகாப்பாக இருக்கிறேன். நீ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயப்படாதே. அதேபோல உன்னை எந்தவொரு ஆடவனும் அணுகமாட்டான். இன்னும் என்னைச் சுமந்துகொண்டு திரியும் நீ உன் கணவனைத் தவிர மற்றவனை மனதாலும் நினைக்கக்கூடாது" என தாலி தனக்குக் கூறுவதாகத் தமிழ்ப்பெண் உணரவேண்டுமாம்.

தாலி அடிமைச் சின்னமல்ல. அது மங்கலச் சின்னம், அடையாளச்சின்னம் என்கிறார் இவர்.

பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதற்கு தாலி அணியும் முறையும் ஒரு நல்ல ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டுவருவதை எடுத்துகாட்ட இக் கட்டுரையும் ஒரு சான்றாகும்.

"சமூக மாற்றமென்பது மன மாற்றமல்ல"
(தூண்டில்: கலம் - 12)
எழுதியவர்: உமா

சீதனம் நடுத்தர வர்க்கத்தினருக்கு உள்ள ஒரு பிரச்சினை. ஆண்களின் மனம் மாறிவிடுவதால் சீதனப் பிரச்சினையை ஒழிக்க முடியாது. பெண் பொருளாதார ரீதியாக விடுதலையடையும்போதும், ஒரு பொதுவுடமைச் சமுதாயத்திலுமே சீதனப் பிரச்சினை ஒழிக்கப்படும் என்பது உமாவின் சரியான பார்வையாகும்.

"அடிமை வாழ்வை தகர்த்தெறிவோம்"
(நமது குரல்: வெளியீடு- 14)
எழுதியவர்: ரஞ்சனி

எமது சமயக் கடவுள்களை எடுத்துக்கொண்டால் முக்கால்வாசியும் ஆண் கடவுள்களே. இவர்கள் பல மனைவியர்களைக் கொண்டவர்களாயும், பெண்கடவுள்கள் தம் கணவரைத் தெய்வமாகப் பூசிப்பவர்களாயும், பெண்கடவுள் தனித்துத் தன்னால் எதையும் சாதிக்கமுடியுமென்று பிரிந்துபோய், பின் ஒன்றும்முடியாமல் கணவனிடம் மீண்டும் தஞ்சமடைவதாகவுமே கதைகள் உள்ளன.

பெண்களைப் புத்தியீனர்களாக்கி, பலயீனர்களாக்கி மதமும் ஆண்களுக்குச் சார்பாகவே உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது

"பெண்விடுதலையை முன்னெடுப்பது யார்?"
(சிந்தனை: பங்குனி, 89 )
எழுதியவர்: பராசக்தி

தமது உழைப்புச் சக்தியை விற்பதன் மூலமே உயிர்வாழ முடியுமென்ற அடிப்படையில் வாழும் பெண்கள், பெண்என்ற முறையிலும், தொழிலாளி என்ற முறையிலும் இரு ஒடுக்குமுறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். தொழில் செய்யவென்ற வீட்டைவிட்டு வெளியேவரும் பெண்கள் பொதுவான ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். கூலியில் சுரண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டல், அதிகாரிகளின் பாலியல் சுரண்டல், பாதையில் பிரயாணம் செய்யும் - போது சுரண்டல் என்று எல்லாவிதமான சுரண்டல்களுக்கும் ஆளாகின்றனர். தம்மைப்போன்ற பல பெண்களுடன்கூடி தமது பிரச்சினைகளைத் தீர்க்க அமைப்பாகிச் செயற்படும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுகிறது. பல கோரிக்கைகளை அமைப்பு ரீதியாகப் போராடி பெற முயல்கின்றனர். இந்தச் சமுதாய முறையில் ஊறிவிட்ட பெண்ணொடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கக் கூடியவர்கள் அமைப்பாகிய பெண் தொழிலாளர்கள்தான்.

பெண் தொழிலாளர்களால்தான் பெண்விடுதலையை முன்னெடுக்க முடியுமென்ற பராசக்தியின் கருத்து முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

சிறுகதைகள்

"நியாயம் புரிகிறது"
(ஏலையா: இதழ் - 18)
எழுதியவர்: விக்ஞ பாக்கியநாதன்

ஒருசோடி காப்பும், தாலியும் அணிந்து அலங்கரிப்பைக் குறைத்துக் கொள்வதால் பெண்களுக்கு விடுதலை கிடைத்துவிடும் அவர்கள் சமூகத்தில் மதிக்கப்படுவார்கள் என்பதே இச் சிறுகதையின் கருவாகும்.

ஆண்களிலும் பார்க்கப் - பெண்கள் அலங்கரித்துக் கொள்வது அதிகம்தான். அவர்கள் அப்படி வளர்த்தெடுக்கப்படுகின்றனர்.

இச் சிறுகதையை எழுதிய விக்ஞ பாக்கியநாதனின் ஆக்கங்கள் எதுவுமே சரியான கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவையல்ல. இதுவரை காலமும் எமது சமூகத்தில் நிலவி வந்த, நிலவி வருகின்ற பெண்விடுதலைக்கு எதிரான, திசைதிருப்பும், அர்த்தமற்ற கருத்துகளைக், கட்டுப்பாடுகளைச் சரியென விளக்கிப் பெண்ணடிமைத்தனத்தை மிகவும் அக்கறையுடன் வளர்த்தெடுக்கின்றன.

*

"ராதா பெரிசான பின்"
(நமது குரல்: வெளியீடு- 12)
எழுதியவர்: பார்த்திபன்



என்ன லெப்ரினென்ற் ஆக்களின்ரை லிஸ்ற்றோடை போறியள்? குடுக்க வேண்டின ஆகள் எல்லாம் குடுத்து முடிஞ்சிதே?

பொலிசுக்கு ஆக்கள் தேவை எண்டு அரசாங்கம் கேட்டிருக்கு. அதுதான் செலக்ற் பண்ணிக்கொண்டு போறன்.

- ராஜன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண் வயதுக்கு வருவது ஓர் இயற்கை நிகழ்ச்சி. அதைப் பெரிதுபடுத்தி சடங்குகள் செய்து பிறருக்குப் பறைசாற்றுவதென்பது மிகவும் கேவலமான விடயம். இந்தச் சம்பிரதாயச் சடங்குகளை பெண்களே முன்வந்து எதிர்க்க வேண்டுமென்கிறது இக் கதை.

*

"மனைவி இறக்குமதி"
(தேனி: பங்குனி, 89 )
எழுதியவர்: பார்த்திபன்

"கானல் நீர்"
(தூண்டில்: கலம் - 24)
எழுதியவர்: சு. சுகந்தி

வெளிநாட்டையும், வெளிநாட்டு மாப்பிளைகளையும் நம்பித் தாயகத்திலிருந்து வரும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இச் சிறுகதைகள் - வெளிப்படுத்துகின்றன. பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் முடிவுகளை தலைவிதி எனக் கருதி வாழ்நாள் முழுவதும் கஷ்ரப்பட்டு வாழ்வை அழித்துக் கொள்ளாமல், தாங்களாகவே தங்கள் வாழ்வைப் பற்றி முடிவெடுத்து சீதன மாப்பிளைகளிடமிருந்து விலகிச் செல்வதாக முடிவுகள் கூறப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கது.

*

"அடையாளம்"
(சிந்தனை: கார்த்திகை 89)
எழுதியவர்: குணம்

சமூகம் மாறும்வரைபெண் திருமணமானதன் அடையாளமாக தாலியைக் கழுத்தில் சுமக்கத்தான் வேண்டும் என்று இச் சிறு கதை அர்த்தம் சொல்லுகிறது.

சமூகத்தின் மாற்றமென்பது ஒவ்வொரு தனிமனிதனினதும் மனமாற்றமே. சமூகம் மாறும் வரை அர்த்தமில்லாத செயல்களைச் செய்துகொண்டே இருக்கலாமா? எந்தவிதமான செயற்பாடும் முன்னெடுக்கப்படாதவரையில் சமூகம் தானாக எப்படி மாறும்?

*

"பெண் விடுதலை வேண்டும்"
(வெகுஜனம்: குரல் -9 )
எழுதியவர்: செம்பிரியா

"நீங்கள் ஒன்றிரண்டுபேர் வெளிக்கிட்டுப் பாடுபட்டால் - போலை விடுதலை வந்திடுமே" என்ற குடும்பத்தாரின் கேள்விக்கு, "சனம் திருந்தாது, திருத்தேலாது என்று நாங்கள் எங்கடை பாட்டிலை இருந்தால் சனம் ஒரு காலமும் திருந்தப் போறதில்லை. சமூகப் புரட்சி தானாக வானத்திலிருந்து குதித்துவிடாது. மக்கள் மத்தியில் இதற்கான சிந்தனையை முதலில் ஏற்படுத்த வேண்டும்" என்று பிரசங்கம் செய்யும் உஷா சமூகம் என்கின்ற வட்டத்திற்குள் தன் குடும்பத்தவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை

குருட்டுக் கட்டுப்பாட்டுக்குள் பெட்டிப் பாம்பாய் அடங்கி வாழ்ந்த பழகிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போன அம்மா பெண்விடுதலை என்றால் என்னவென்றறியாது....

பெண்விடுதலை பற்றித்தா யாருக்கு எடுத்துக் கூறாமல் குரு ட்டுக் கட்டுப்பாடுகளைக் கார ணமாகக் காட்டிச் சிறுகதை முடிக்கப்பட்டுள்ளது.

<u>தொடர்கதை</u>

"சித்திரா - பெண்"
(நமது குரல்)
எழுதுபவர்: பார்த்திபன்

இப்பவரைக்கும் நான் என்னத்தைக்கண் டிருக்கிறன்? கலியாணம் கட்டுமட்டும் ஐயா, அம்மாவுக்காண்டி. கலியாணம் கட்டின பிறகு புருசனுக்கும், பிள்ளைக்குமாய்....

பெண் தாய் என்ற ஸ்தா னத்தில் குடும்பத்துக்கு மாடாக உழைக்கிறாள். அந்த நெருக்கடிக ளுக்கிடையில் அவள் தன்னைப்பற் றியும் சிந்தித்தாலும், வழமை போலவே அவள் சிறித்திப்பதுட ன் மட்டும் நின்றுவிடுகிறாள்.

என்னை மற்றவையள் பாவிக்கிறபடியா லதான் எனக்கு யோசிக்க நேரமில்லாமல் முடியாமலிருக்கு.

அன்று நடந்தது அப்பட்டமான பாலிய ற்பலாத்காரம்

அந்நியரால் அல்லது போ ராட்ட காலத்தில் இராணுவத் தினரால் மட்டும் பெண்கள் பா லியற்பாலாத்காரம் செய்யப்ப டுவதில்லை. மனைவியின் விருப்புக் கு மாறாக கணவன் உடலுறவு கொண்டால் அதுவும் பாலியல் பலாத்காரம்தான்.

விந்தைத் தானம் செய்வதுடன் பொறு ப்பை முடித்துக்கொண்டுவிடும் அப்பாக் களில் ஒருவர்தானே!

பிள்ளையைச் சுமக்கப் போவதும், பின் வளர்த்தெடுக்க போவதும் மனைவிதானே என்ற கணவனின் அலட்சியத்தை இந்த வரிகள் சுட்டிக் காட்டுகின்றன.

கருவறையில்
ஓர் அதிர்வு
நான் உன்னைப்போல்
அழமாட்டேனென்று.

விளையாட்டில்கூட ஆண், பெண், பிள்ளைகளுக்கான வித்தி யாசம் இருப்பதை குழந்தைத்த னமாகச் சிந்தித்து, மேலேயுள்ள சிவத்தின் கவிதை வரிகளுக்கேற் ப வளர்கிறாள் சித்திரா.

இந்தத் தொடர்கதையை எழுதும் கதாசிரியர் ஆணாக இரு ப்பதாலோ என்னவோ கதை யை வாசிக்கும்போது அவர் பெண்களின் பிரச்சினையை சொ ல்லி ஒப்பாரி வைப்பதுபோலிரு க்கிறது.

<u>பிற</u>

பெண்களை அங்கம் அங் கமாக வர்ணித்து இழிவுபடுத்தும் அல்லது இன்பங்கொள்ளும் எழுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ைகளில் 'காசி'யின் ஆக்கங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இவரின் எந்தவொரு ஆக்கத்திலும் பெண்களின் உண்மையான பிரச்சினைகள் கூறப்படவில்லை.

சில சஞ்சிகைகள் பெண்கள் ஆண்களுக்கு அடிமைகளாகப் பணிந்து, வணங்கி வாழ வேண்டும் என வலியுறுத்துகின்றன. 'மல்', 'கலைவிளக்கு' போன்ற சஞ்சிகைகளை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட கீழ்த்தரமான எழுத்துகளின் போக்குகள் மாற்றப்படாமல் தொடருமானால் பெண்விடுதலையென்பது திசைமாறியும் போகலாம்.

மேற்கு ஜேர்மெனியிலுள்ள ஆக்கதாரர்கள் அனைவரும் நடுத்தர வர்க்கத்தினரே, இவர்கள் தங்கள் வர்க்கத்தைச் சார்ந்த பெண்களின் பிரச்சினைகளையே எழுதுகிறார்கள். பாட்டாளி வர்க்கப் பெண்களின் பிரச்சினைகளை எழுத முடியாவிட்டாலும், அவர்களைப் பற்றிய உணர்வினை ஊட்டும் விதமாகவேனும் ஆக்கங்கள் எழுப்படுவது மிகமிகக் குறைவு என்றே சொல்லவேண்டும்.

---

**7வது இலக்கியச் சந்திப்பின்போது எழுதியவர் பெயர் சொல்லப்படாமல் வாசிக்கப்பட்ட இக் கட்டுரை, எழுதியவராலேயே சான்டிலக்கு கிடைக்கப் பெற்றது.**

---



# நூல் அறிமுகம்




தொடர்புகளுக்கு
SINNA-RAJESWARAN
"AMUTHAM"
GLADBACHER STR-16
5013 ELSDORF (RHLD)

www.tamilarangam.net

# புதிய கண்ணியவான்

இலங்கையில் தற்போது 'அனைத்து மக்களுக்கும்' பொதுவான கண்ணியவான் ஒருவர் உருவாகி வருகிறார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பிரேமதாசாதான் இந்த நபர்.

போர்வெறியையும், பகைமை உணர்வுகளையும் நேரடியாக வெளிப்படுத்தி, ஆயுதப்படைகள் மூலம் மக்களைக் கொன்று குவித்து ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரின் நோக்கங்களையே பெரிதும் கொண்டிருக்கும் புதிய ஜனாதிபதி, தனது நோக்கங்களை நிறைவேற்ற ஜே. ஆர். பாணியை நாடாது புதிய வழிமுறைகளை அமைத்து வருகிறார்.

பிரேமதாசவின் வாயிலிருந்து இப்போது வெளிவரும் - வார்த்தைகளெல்லாம் அமைதி, சமாதானம், ஒற்றுமை என்ற ஜாலங்களாகவே இருக்கின்றன. பகிரங்கக் கூட்டங்களிலெல்லாம் இவற்றுக்குதான் பிரேமதாச அறைகூவல் விடுக்கிறார். பத்திரிகைகளில் 'உருக்கமான' வேண்டுகோள்கள் விடுக்கிறார்.

இந்தக் கண்ணியவான் வேஷங்களெல்லாம் தன் இரத்தக் கறை படிந்த பயங்கரவாதங்களை மூடி மறைக்க பிரேமதாசவால் மேற்கொள்ளப்படும் பிரயத்தனங்களே. இந்தக் கண்ணியவான் என்ன செய்தார்? என்ன செய்கிறார்?

பேச்சுவார்த்தைக்கு வரும்படி வேண்டுகோள் விடுத்து விட்டு அத ஜே. வி. பி. யினரை இராணுவத்தின் மூலம் கொன்றொழித்தார்.

ஜே. வி. பி. யை அடக்குகிறோம் என்று சொல்லிக்கொண்டு அப்பாவி மக்களைத் தெருத் தெருவாக உயிரோடு கொளுத்திக் கொலை செய்து கொண்டிருப்பவர். இரவிரவாக இளைஞர்களைக் - கைது செய்து அவர்களைக் 'காணாமல் போனவர்கள்' ஆக ஆக்கிக் கொண்டிருப்பவர்.

www.tamilarangam.net

தன்னையும், தனது அரசையும் எதிர்ப்பவர்களையும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இயங்குபவர்களையும் தனது குண்டர் படைகள் மூலம் கொடூரமாகக் கொலை செய்து பாதைகளிலும், ஆறுகளிலும் வீசி வருகிறார்.

மலையக மக்களை பிரஜைகள் அல்லாதோராக்குவது, ஆயுதப்படைகளை ஏவி அவர்களைக் கொலை செய்வது, பலவந்தமாக அவர்களை நாடுகடத்துவது என்ற 'கொள்கை'களை செயற்படுத்தி வருகிறார்.

தனது 'அரசியல்' நடவடிக்கைகளை தனது அமைச்சர்களின் வாயாலாயே வெளிப்படுத்தி, அந்நடவடிக்கைகளினால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கான முழுப்பழியையும் அந்த அமைச்சர்கள் மேல் திசைதிருப்பி, அவர்களைப் பதவி நீக்கம் செய்வதும், அவர்கள் மேல் 'ஒழுங்கு' நடவடிக்கைகள் எடுப்பதுமான நாடகங்களை நடித்து வருகிறார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமே 'தீர்க்க' முடியும் என்று கூறிக்கொண்டு, எல். ரி. ரி. ஈ ஈரோஸ், ஈ. பி. ஆர். எல். எவ்வுடனான 'பகைமைகளை' முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதே 'மகத்தான தீர்வு' என்று ஒரு பக்கம் சொல்லிக்கொண்டு, மறுபக்கத்தில் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் மீண்டும் இராணுவமயமாக்கலைத் தீவிரப்படுத்தி வருகிறார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் திசைதிருப்பும் வழிகளில் ஒன்றாக மேதினம் போன்ற விழாக்களில் தமிழகப் பாடகர்களை அழைத்து தமிழ்ப் பாடல்களையே ஒலிக்கச்செய்து 'ஸ்ரண்ட்' அடித்து வருகிறார்.

இத்தகைய கோர முகங்களை மறைக்க கண்ணியவான் வேஷம் போடும் பிரேமதாசவுக்குப் பலமளிக்கும் வகையில், அவரே கண்ணியவான், அவர் நம்பிக்கைக்குரியவர்' என்று எல். ரி. ரி. ஈ. யும், ஈரோஸும் 'அடித்துச்' சொல்லிவருகின்றனர்.

இப்படிக் கட்டியெழுப்பப்பட்டுவரும் கண்ணியவான் மாயையும், தனிநபர் வாதமும் பிரேமதாசவின் தொடர்ச்சியான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும், வெளிநாட்டுக் கடன் உதவிகளைப் பெறுவதற்குமான மறைப்புகளே என்பதை அறிந்துகொள்ளாமல் விடுவது அபாயத்துக்கே இட்டுச்செல்லும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# கொலை

எதில் அடிக்க வேண்டுமென்று சொல்லுகின்றீர்கள்? உங்கள் தலையிலா, காலிலா, முகத்திலா அல்லது நீங்கள் சொல்லும் எதில் வேண்டுமானாலும், இன்னும் ஒரு படி மேலே சென்று உங்களை நேசிக்கும் அல்லது நேசிப்பதாகச் சொல்லும் நண்பர்கள்– உங்கள் வேண்டுகோள்களிற்கு உடன்படும் பக்குவம் கொண்டவர்கள் ஆகவிருப்பின்– அவர்கள் காட்டும் உங்களது அல்லது நீங்கள் காட்டும் அவர்களது உடல்களின் எந்த அங்கங்களிலும் எனது கைகளால் பலமாக அடித்துச் சத்தியம் செய்ய நான் தயார்.

நான் கொலைஞன் அல்லன். வாய்பேசாத பிராணிகளைகூட இன்றுவரை நான் கொன்றதேயில்லை. கொலை செய்ய எனக்கு விருப்பமில்லை.

இன்றோ, கொலை செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்துள் நான் தள்ளப்பட்டுள்ளேன். எனக்குப் பிச்சை போடும் பத்திரிகாசிரியர், "உனக்கு எல்லாச் சுதந்திரமும் நான் தருகின்றேன். ஒரு சிறுகதை எழுது. முடிவில் கதாநாயகனையோ, கதாநாயகியையோ கொன்றுவிடு இல்லையேல் சீட்டுக் கிழித்துவிடுவேன்" என்று கட்டளையும், வோர்னிங்கும் பிறப்பித்துவிட்டார்.

மிகவும் சிரமப்பட்டு, பயத்துடன், கொலையின் மீது எனக்கிருந்த அதிருப்தியை அவரிற்கு விளங்கப்படுத்தினேன்.

அவரோ சிறுகதையுள் – கொலை செய்யும்போது இரத்தம் ஒருபோதுமே சிந்தாதென்றும், ரசனையுணர்வுடன் கொலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யும் சுதந்திரம் பேசு தாக்கிய அனைவருக்குமேயுண்டென்றும், பத்திரிகையின் பல பிரதிகளை விற்பதற்கான மந்திரங்களில் இதுவும் ஒன்றென்று சொன்னார்.

எனக்கு மந்திரமும் தெரியாது. தந்திரமும் தெரியாது. சின்னத்தம்பியண்ணைக்கு அவைகள் தெரியும். அவர் செத்துவிட்டார் மந்திர, தந்திரங்கள் மட்டுமல்ல கலையும் தெரிந்தவர் அவர்.

கலையென்றால் எழுத்துக் கலையல்ல. ஆட்டும் கலை. ஆட்டு ஆட்டென்று ஆட்டும் கலை. பேயாட்டும் கலை. பேய் பிடித்தவர்களையும், பில்லி, சூனியங்களால் அறெஸ்ற் பண்ணப்பட்டவர்களையும் ஆட்டு ஆட்டென்று ஆட்டுவார்

## ஜெயந்திரன்

குமரிகளையும், குமரிகளல்லாதோரையும் பேய்கள் சுரண்டும்போது, சின்னத்தம்பியண்ணையின் கோயிலிற்குத்தான் அவர்கள் அழைத்துவரப்படுவார்கள்.

கற்பூரத்தைக் கொளுத்தி இந்த மகளிர் முன் வைக்கும் – போது அவரிற்குக் கலை வரும் ஏன், அவரைச் சுற்றிவர நின்று விடுப்புப் பார்த்துக்கொண்டிருக்கும் அனைவருக்குமே கலைவரும்

இப்படியொரு தடவை – பொன்னுச்சிக் கிழவிக்குக் கலை வந்து கோயிலின் முன்னிருந்த பூவரசில் அவள் விர், விர் என்று ஏறியதையும், இறங்கடி வேதாளம் இறங்கடி என்று சின்னத்தம்பியண்ணை அவளை இறக்கி வைத்ததையும் இப்போது நினைத்தால்கூட என்னைத் திகில் அரவணைத்துக் கொள்ளும்.

பேய் சுமந்துவரும் மகளிரின் முன் சில உச்சாடனங்களைச் செய்துவிட்டு தலைமயிரை பிடித்து இழுப்பார். இலைகளையும், தளைகளையும் ஈரமாக்கிவிட்டு– ஜேம்ஸ்பொண்ட் 007பாணியில்– அவைகளைக்கொண்டு முகத்திலடிப்பார். கன்னத்தில் வாங்கு வாங்கென்று வாங்குவார். மகளிர் ஆடைகள் கிழிந்து உடம்புகள் தெரிந்தாலும் எங்களது ஆண்மைகள் விழித்துக்கொள்ளாது. ஆனால் பேய்கள் போய்விடும்.

பாவம் சின்னத்தம்பியண்ணை செத்துப் போய்விட்டார். சாகாதிருந்தால் அவரைக்கொண்டு கதாநாயகனாக்கியிருக்கலாம். ஆறின கஞ்சி பழங்கஞ்சி.

இப்போதோ நான்கொலை செய்தாகவேண்டும். தாள்களில் இரத்தம் சிந்தாமல்கொலை செய்ய வேண்டும். இல்லையேல் எனது தலை போய்விடும்

கொலையில் எனக்கில்லாத உடன்பாடு இலக்கியத்திலுண்டு கவிதை, சிறுகதை, குறுநாவல் அல்லது நாவல் இப்படி ஏதாவது எழுதினால்தான் இலக்கியமென்று வணங்கப்படும்.

நான் இலக்கியம் படைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதையிட்டு ஆசிரியரிற்கு எந்த உடன்பாடுமேயில்லை. பத்திரிகையாளர்கள் இலக்கியம் படைக்க கூடாதென்பது அவர் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருக்கும் ஒரு கோட்பாடு. இருந்தும் என்னிடம் அவர் சிறுகதை கேட்டுவிட்டார்.

சிறுகதை, இலக்கியம் என்ற மொழிபெயர்ப்பில் என்னிடம் அவர் அதைக் கேட்கவில்லை. என்னிடம் சிறுகதை எழுதக் கேட்டதன் மூலம், நான் இலக்கியவாதியென்பதை இலக்கியவாதி-யென்று சொல்லாமல் அவர் அங்கீகரித்துவிட்டார் நானேமொழிபெயர்த்துக்கொண்டேன்.

என்னுடன் அவர் இப்படி நடந்துகொண்டது இதுதான் முதற்தடவை. ஏன் என்ற ஆய்விற்குள் இறங்குதல் என்னையே அழித்துக் கொள்ளுமொன்றாகவிருக்கும் என்பதால் கிடைத்த சந்தர்ப்பத்-தைப் பயன்படுத்துவோமென்று முடிவெடுத்தேன்.

ஆசிரியர் இலக்கியம் மீது வைத்த தத்துவத்தைக் கேட்டதும், கொலையும் கலையே என்ற பென்னம்பெரிய பிரக்ஞை எனக்குள் ஜனித்தது. ஆனால் யாரைக் கொல்வது என்பது தான் பிரச்சினையாகவிருந்தது.

இறந்தவர்களை மீண்டும் ஜனிக்க வைத்துக் கொல்வதா? அல்லது உயிரோடு இருப்பவர்களுக்கு புனைபெயர்கள் ஏதாவது கொடுத்துக் கொல்வதா? முடிவெடுக்க முடியாமல் நான் தடுமாறினேன்.

பிரம்மாவின் பிரம்மாவான ஆசிரியரிடம் மன்றாடினால் கெல்ப் கிடைக்கும் என்ற ஐடியா அப்போது ஏற்பட்டது.

போன் பண்ணினேன். நான் கலோ என்று சொல்லுமுன் அவர் எதையோ கொறித்துக்கொண்டிருப்பது எனக்கு நறுக்காகக் கேட்டது.

(தொடர்ச்சி 29ஆம் பக்கம்)



நாங்கள் ஊர் ஊராய் ரக்றறிலபோய் ஆக்களை அள்ளிக்கொண்டு வரச்சொல்லியும் எங்கட பகுதியிலை நடந்த கூட்டத்தைவிட உங்கடை பகுதி கூட்டத்தில தான் சனங்கள் கூட. நீங்கள் என்ன செய்தனியள்?

நாங்கள் லொறியளைக் கொண்டு போண்தான் ஆக்களை அள்ளினனாங்கள்.

www.tamilarangam.net




01.05.90 வீரகேசரி

கொட்டாஞ்சேனை சந்தியிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றில் சுமார் 20 விண்ணப்பதாரிகள் காத்திருந்த வேளையில் அவ்விடம் சென்ற இருவர் தங்கள் பிஸ்டல்களால் மட்டக் களப்பைச் சேர்ந்த பைதரன் என்பவரைச் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பியோடிவிட்டனர்.

சென்னை கே.கே.நகர் துளைமேட்டிலிருக்கும் இரண்டு வீடுகளில் பொலிசார் மேற்கொண்ட திடீர்வேட்டையின் போது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியை சேர்ந்த 73 இலங்கையர்கள் கைதாகினர்.

வேலூரில் புளொட் இயக்கத்தைச்சேர்ந்த 5பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்குடி, சாய்ந்தமருது பகுதிகளில் கடந்தகாலங்களில் மக்கள் முன்னணிக் கிளைகளை அமைப்பது சிரமமாகவிருந்தது. முஸ்லீம் மக்கள் எமது அணுகுமுறைகளையும், நிலைப்பாட்டையும், இலங்கையரசின் உறவையும் கருத்தில்கொண்டு அவர்களாகவே முன்வந்து கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்தக் கிளைக்காரியாலயத்தைத் திறந்துவைத்தோம். - அம்பாறை மாவட்ட புலிப் பொறுப்பாளர்

02.05.90 வீரகேசரி

திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு மீன் ஏற்றிவரும் லொறிச் சொந்தக்காரர்கள் மீன் லொறிகளை சேவையிலீடுபடுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். ஒவ்வொரு லொறிக்கும் ரூபா 250,-வீதமும், லொறியில் ஏற்றப்படும் ஒவ்வொரு மீன்பெட்டிக்கும் ரூபா 10,- வீதமும், ஒவ்வொரு ஐஸ்கட்டிக்கும் ரூபா 10,-வீதமும் வரி அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டிருப்பதாலேயே இந்நிலை.

இ.தொ.கா.வும், யு.என்.பி.யும் இன்றுபோல் என்றும் இணைந்து செயற்படவேண்டும் - இராஜாங்க அமைச்சர்

வடமாராட்சி, கரவெட்டி, புலோலிப் பகுதிகளில் கொள்ளைச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளன.

சிங்கள இனவாதக் கட்சிகள் இனவாதத்தை மீண்டும் கட்டவிழ்த்துவிடத் தயார்

www.tamilarangam.net

ஆகிக்கொண்டிருக்கின்றன - புலிகளின் அரசியல் ஆலோசகர்

03.05.90 வீரகேசரி

புலிகளின் வாலை அரசாங்கம் இறுகப்பிடித்துக் கொண்டிருக்கிறது - சு.க.உப தலைவர்

இலங்கை அரசியல் அமைப்பின் 6 வது திருத்தத்திற்கு விரோதமாக ஈழத்தைப் பிரகடனம் செய்ததன் மூலம் ஆளும் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி எல்.எவ் உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை இழந்துள்ளனர். ஆட்சிக்கு விசுவாசம் உடையவர்களாக இருப்பதனால் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் சட்டபூர்வமான மாகாணசபை உறுப்பினர்களாக இருந்துவருகின்றனர். இருந்தும் எமக்குரிய இரண்டுமாதச் சம்பளம் வழங்கப்படவில்லை - வடக்கு, கிழக்கு மாகாணசபை முஸ்லீம்காங்கிரஸ் உறுப்பினர்.

1977இல் ஆட்சிக்கு வந்த ஐ.தே. கட்சி தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்ததோடு மாத்திரமல்லாமல், நாட்டைப் பயங்கரத்துக்குள்ளாக்கியது. 1980இல் நடந்த வேலைநிறுத்தத்தில் தொழிலலளர்களை நசுக்கியும், பலதொழிலாளர்களைக் கொலை செய்தும்விட்டது. மாணவர்களின் உரிமையைக்கூடப் பறித்தெடுத்தது. சுதந்திரமாக வாழ்ந்த உழைக்கும் வர்க்கத்தினரின் போராடும் உரிமையையும் பறித்தெடுத்தது. மக்கள் சாப்பாடில்லாமல், மாணவர்கள் படிப்பில்லாமல் இருக்கின்றபோது ஐ.தே.க மேதினக் கூட்டத்திற்காக காலிமுகத்திடலில் 35,000,00 ருபாசெலவு செய்து மேடை அமைத்துள்ளது - ஐக்கிய சோசலிஸ முன்னனியின் தலைவி

தோட்டத் தொழிலாளர் வர்க்கம் இன்று சகல உரிமைகளையும் பெற்றுவிட்டதாகத் தெரிவிப்பதெல்லாம் வெறும் ஏமாற்றுவித்தையாகும். தொழிலாளர்கள் இன்னமும் பழைய நிலையிலேயே உள்ளார்கள். - தொழிலாளர் தேசியசங்கத் தலைவர்

04.05.90 வீரகேசரி

இந்தியப் பிரஜாவுரிமை பெற்ற இந்திய கடவுச்சீட்டுடன் இலங்கையில் தங்கியுள்ள இந்தியவம்சாவளியினர் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லத்தான்வேண்டும் என்பதில் மாற்றம். எதுவுமில்லை. இ.தொ.க அரசில் ஓர் அங்கம். தொண்டமான் அமைச்சரவை உறுப்பினர். எனவே நாம் எப்போதும் கலந்து பேசிக் கொள்ள முடியும். இந்தியக்கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் இங்கு இருக்கும்போது எமது பிரஜைகளுக்குத் தொழில் வழங்குவது பிரச்சினையாக உள்ளது -அமைச்சரவைப் பேச்சாளர்

எமது வேண்டுதலின் பேரில் மாகாணசபையைக் கலைப்பதற்கு ஜனதிபதி இணக்கம் தெரிவித்துள்ளபோதும் அரசமைப்பின் 6வது திருத்தச் சட்டத்தை நீக்குவது சிரமமான காரியமாகும். அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் இல்லாமையே இதற்கான காரணமாகும் - புலிகளின் அரசியல் ஆலோசகர்

மலையக மக்களின் அபிலாசைகளின் விருப்புகளுக்கு மாறாக, 35 வருடங்களுக்குமுன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இன்று செயற்பட நினைப்பது புத்திசாலித்தனமாக அமையாது. அத்துடன் அது அடிப்படை மனித உரிமைக்கு முரணானதாகும். ஒப்பந்தங்களுக்கேற்ப நிர்ப்ப

www.tamilarangam.net

ந்த நிலையில் மனுச்செய்த இந்தியக்க டவுச் சீட்டுப் பெற்றவர்களில் பலர் இன்றில்லை. அவர்களின் பிள்ளைகள்தான் இன்னுள்ளனர். அவர்களை நிர்ப்பந்தப்ப டுத்தி வெளியேற்றுவது முறையாகாது. - இ.தொ.கா. பொதுச் செயலாளர்

தற்போதைய மேதின விழக்கள் தொழிலாளர்களுக்கு எதிர்மாறானவர்களுக்கு என்னவிதத்தில் பொருத்தமாகக் காட்டப்படுகிறதெனில், உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான போராட்டத்தை மழுங்கடிக்கவும், மக்களையும், தொழிலாளிகளையும் அவர்களது உண்மையான போராட்டத்தை அடையவிடாமல் மேதினத்தை ஒரு கேளிக்கையாக்கி தங்களது குறுநிலை அரசியலுக்கு இலாபம் தேடவுமே பொருத்தமாகக் காட்டுகின்றனர் - இலங்கை வர்த்தக ஊழியர் சங்கச் செயலாளர்

05.05.90 வீரகேசரி

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த குருகலை தோட்டங்களில் காய்கறித் தோட்டம் செய்துவந்த 80 குடும்பத்தினர் பொலிசாரினால் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்களது வீடுகளும், உடமைகளும் எரிக்க ப்பட்டுள்ளன.

இன்று திருகோணமலைப் பகுதியில் 37 இராணுவ முகாம்கள் அமைந்துள்ளன. இவை சிங்கள மக்களைப் பாதுகாப்பது, சிங்களக் குடியேற்றத்திற்குத் துணை செய்வது, தமிழ் பேசும் மக்களை அப்பிரதேசத்தில் இருந்து அகற்றுவது ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளன. - புலிகளின் மக்கள் முன்னணி தலைவர்

உலகவங்கியின் ஆட்டம் போடுகின்ற அரசு ரூபாவின் மதிப்பைக் குறைத்து, உரத்திற்கு வழங்கப்பட்டுவந்த மானியத்தையும் நிறுத்தி ஏழை விவசாயிகளை கஷ்டத்தில் தள்ளிவிட்டது. வறுமை இல்லாதொழிக்கிறேன் என்ற ஜனாதிபதியின் இன்றைய ஆட்சியில் வறுமை களனி ஆற்றில் பிணங்கள்தான் மிதக்கின்றன. ஏழை உழைப்பாளிகளின் ஊதியத்திலிருந்து 25 சதவீதம் ஜனசவியத் திட்டத்திற்கு வெட்டப்படுகின்றது. - ல.ச.ச.கட்சியின் செயலாளர்.

ஜனாதிபதி பிரேமதாச தெரிவு செய்துள்ள 78 மந்திரிமார்களுக்கும் வருடமொன்றுக்கான சம்பளம் ரூபா 120 இலட்சம். அலவன்சோ அதைப்போல 3 மடங்கு. பாணின் விலை இன்று 4.90 பொருட்களின் விலையேற்றம் தினமும் ஏறிக்கொண்டே போகிறது. உழைக்கும் வர்க்கத்தினரை அடக்கியொடுக்கபொலிஸ்காரர்களினதும், இராணுவத்தினரினதும் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிக்கப்பட்டுவருகிறது - கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்

06.05.90 வீரகேசரி

ஆலயங்களில் இடம்பெறும் மிருகபலிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தடைவிதித்துள்ளனர்.

குதிரையை குளத்துக்கு இழுத்துச்செல்ல முடியுமே தவிர தண்ணீர் குடிப்பது அது தானாக விரும்பினால்தான் நடக்கும். ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஒரு சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர முடியாது - புலிகளின் மக்கள் முன்னணித்தலைவர்

இலங்கையின் இன்றைய பொருளாதார அரசியல், சமூக அமைப்புக்குள் இனப்பிரச்சினையை முற்றுமுழுதாகத் தீர்த்துவைக்கமுடியாது. ஆனால் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களும், எதிர்க்கட்சிகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பவர்களும் தத்தமது பதவிகள், அதிகாரத்தைக் கைப்பற்றுதல் போன்றவற்றுக்கு அப்பால் நின்று நாட்டையும் மக்களையும் பற்றி நேர்மையாகச் சிந்தித்துச் செயற்பட முன்வந்தால் இனப் பிரச்சினைக்கு ஓர் குறைந்தபட்ச தீர்வை காணமுடியும். அத்தகைய குறைந்தபட்சத் தீர்வில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய இணக்கம் காணப்படவேண்டும். இந்தவகையிலேயே இடது கம்யூனிஸ்ட் கட்சி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதனை அர்த்தப்படுத்தி வலியுறுத்திவருகிறது.

07.05.90 வீரகேசரி

இந்தியப் பிரஜைகளை நாடு திருப்பியனுப்புவதற்கான வழிவகைகள் குறித்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவிருப்பதாக இந்தியா கூறியுள்ளது. ஆனால் இதில் இந்தியாவிலிருக்கும் இலங்கைப் பிரஜைகளை திருப்பியனுப்புகின்ற விவகாரமும் சம்பந்தப்பட்டுள்ளது என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

08.05.90 வீரகேசரி

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யான சாம் தம்பிமுத்து கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மனைவி கலா பலத்த காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

09.05.90 வீரகேசரி

அக்கரைப்பற்றில் தம்பிலுவிலையைச்சேர்ந்த சுதாகரன் என்பவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பிந்திய செய்திகள்
(15.06.90)

கடந்த சில தினங்களாக திருகோணமலை தவிர்ந்த கிழக்கு மாகாணத்தின் ஏனைய பல பகுதிகளில் இலங்கைப்படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலத்த மோதல்கள் நடைபெற்றுவருகின்றன. கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும், மன்னாரிலுள்ள பொலிஸ்நிலையங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இலங்கை இராணுவம் தரை, ஆகாய மார்க்கங்களாக தாக்கியதில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். கல்முனை பாடசாலை, மட்டக்களப்பு ஆஸ்பத்திரி என்பனவும் ஆயுதப்படைகளின் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளன. பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். தென் பகுதியிலிருந்து மேலும் இராணுவத்தினர் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதேநேரம் கொழும்பிலும் அதனையண்டிய பகுதிகளிலிருந்து சுமார் 700க்கும் அதிகமான தமிழர்கள் ஆயுதப்படைகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புலிகளுக்கும், இலங்கையரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடருமென்றும், பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமைச்சர் கமீத் வடக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈழவிடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெறுவதைத்தவிர அடுத்த தலைமுறைக்கு விடுதலைப் போராட்டத்தைக் கையளிக்க விடுதலைப்புலிகள் தயாராகவில்லை புலிகளின் வடமாராட்சி இணைப்பாளர்

11.05.90 வீரகேசரி

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருளாதார உறவை மேலும் விருத்தி செய்வது தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கை-இந்தியக் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் கூட்டம் டில்லியில் நடைபெறவிருக்கிறது.

மட்டக்களப்பு புல்லுமலையில் ஜி.தங்கதுரை என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

12.05.90 வீரகேசரி

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.சாம் தம்பிமுத்து கொலை தொடர்பாக இதுவரை சுமார் 150 தமிழ் இளைஞர்கள் கொழும்பில் பொலிசாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர்.

ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எல்லைப் பகுதியாகவும், விசாயப் பிரதேசமாகவும் விளங்கும் பொத்தானை, கீத்தப்பத்து, டிப்போமடு வட்டமடு ஆகிய பகுதிகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர் சட்டவிரோதமாகக் குடிசைகள் அமைத்து வருவதாக இப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தவலை தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் கணிசமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்குமிடையே நிலவிய பகைமையைப் போக்கியுள்ளது. விடுதலைப்புலிகளுக்கும் அவர்களுக்குமிடையே போர் நிறுத்தம் ஏற்படவும், அவசியமான நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் பிராந்திய அல்லது மாவட்ட மட்டத்தில் உள்ள படைத்தளபதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு விடயங்களுக்கு தீர்வு காணுகின்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கமும், புலிகளும் இணைந்து வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சமாதானத்தையும், சுமுகநிலையையும் ஏற்படுத்த முடிந்தது. வடக்கு-கிழக்கில் தற்போது 900 பொலிசார் இருக்கிறார்கள். இது போதாது. மாகாண பொலிஸ் உருவாக்கப்பட வேண்டுமென நாம் அரசிடம் வலியுறுத்துகிறோம். வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ்-சிங்கள எல்லைக் கிராமங்களில் படைமுகாம்கள் இருக்கலாம். ஆனால் படையினர் முகாம்களிலேயே தங்கியிருக்கவேண்டும் - புலிகளின் அரசியல் ஆலோசகர்.

விடுதலைப்புலிகள்தான் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைக்குக் காரணம் இதனை அவர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர். அரசோ மௌனம் சாதித்து வருகிறது. சாம் தம்பிமுத்து படுகொலைக்கும் அவர்கள்தான் காரணம் - டெலோ அரசியல் ஆலோசகர்

13.05.90 வீரகேசரி

தமிழீழம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் கடந்த 17 வருடங்களாக ஆயுதப்போராட்டத்தை நடத்திவரும் தாங்கள் அரசாங்கம் முன்வைக்கும் இடைக்காலதீர்வொன்றை பரிசீலனை செய்வதற்காக

தமது போராட்டத்தை இடைநிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருப்பதைப் புலிகள் அரசாங்கத்திடம் நினைவூட்டினர்.

14.05.90 வீரகேசரி

ஜனாதிபதி மகாசங்கத்தினரை நன்றாகக் கவனிக்கிறார். சிங்கள மொழியையும், பௌத்த சாசனத்தையும் முன்னேற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனாதிபதிக்குப் பலமும், தைரியமும் கிடைக்கட்டும் என நான் பிரார்த்திக்கிறேன் - மகாபோதி தர்ம அமைப்பின் தலைவர்

15.05.90 வீரகேசரி

கொழும்பிலிருந்து பருத்தித்துறைநோக்கிச் சென்ற தனியார் மினிபஸ் அநுராதபுரம்-நொச்சியாகம காட்டுப்பகுதியில் இராணுவச் சீருடை அணிந்தவர்களால் வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

17.05.90 வீரகேசரி

சம்மாந்துறையில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த செயிலாப்தீன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் ப.சந்திரசேகரன் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வசதியளிக்கும் வகையில் சர்வகட்சி மகாநாட்டில் பங்குபற்றுவது பற்றி சாதகமாகவும், தீவிரமாகவும் சிந்திப்பதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். தூதுக்குழுவினர் அரசுடனான சந்திப்பின்போது இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் -இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு ஒத்தாசை புரிபவர்கள் எமது குடிவரவு, குடியகல்வு திணைக்களம், சுங்கத் திணைக்களம், எயர்லங்கா ஆகியவற்றிலும் இருக்கிறார்கள் - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

18.05.90 வீரகேசரி

மட்டக்களப்பில் கருதாவளையைச்சேர்ந்த நடேசானந்தராஜா என்ற ரெலோ உறுப்பினர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

சகல தமிழ்குழுக்களையும் ஒன்றுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு அரசு செயற்படுவதாகவும், எந்தவொரு குழுவையும் அரசு புறக்கணிக்காது எனவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

ஈழவிடுதலை இயக்கங்களின் தமிழகமுதல்வருடனான சந்திப்பு எதுவும் மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டு அதன் ஒப்புதலுடனேயே நடைபெறவேண்டும் - கருணாநிதி

19.05.90 வீரகேசரி

நீண்ட நாட்களின் பின் யாழ்ப்பாணத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளால் கந்தசாமி என்பவருக்கு மின்கம்பத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணித் தலைவரை விடுவிக்கக் கோரி 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உண்ணாவிரதமிருந்து வருகின்றனர். சுமார் 10,000தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

20.05.90 வீரகேசரி

தமிழ்நாடு அரசாங்கத்தால் ஏப்ரல் 26இல் வெளிநாட்டவர் சட்டத்தின்கீழ் கைதுசெய்து சிறையில் வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை விடுதலை செய்யக்கோரி இந்திய உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டரிட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனு தள்ளுபடி செய்யப்பட்டது. சுமார் 110பேர் சிறையில் உள்ளனர்.

இனஒற்றுமையிலும், நாட்டின் சுபிட்சத்திலும், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் இலங்கை அரசு காட்டிய ஆர்வம் இந்திய வெளியேற்றத்துடன் குன்றிப் போகிறதா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகளின் தற்காப்பு முயற்சிகளும், அரச பாதுகாப்புப் படைகளின் இராணுவ முஸ்தீபுகளும் மக்களுக்கு மீண்டும் கடந்தகால கசப்பான அனுபவத்தை நினைவூட்டுவதாக உள்ளன.

சர்வதேச மன்னிப்புச்சபையிடமிருந்து எனக்கு கட்டுக் கடிதங்கள் வருகின்றன அவற்றை நான் வாசிப்பதில்லை. வாசிப்பதற்கு எனக்கு வேறு கடிதங்கள் உள்ளன. சர்வதேச மன்னிப்புச்சபையின் கடிதங்கள் எனது மகனுக்கு முத்திரை சேர்க்கத்தான் உதவுகின்றன -பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

20.05.90 ஐலண்ட்

ஆயுதங்கள் வைத்திருப்பவர்களையும், மக்களைப் பயமுறுத்துபவர்களையும் வைத்துக்கொண்டு நாம் தேர்தல் நடத்த முடியாது. தேர்தலை நடாத்தி ஏன் நாங்கள் நேரத்தையும், பணத்தையும் வீணாக்க வேண்டும் - ரஞ்சன்

21.05.90 வீரகேசரி

வெலிகம பஸ் நிலையத்தில் முண்டமற்ற மனிதத் தலையொன்றை பொலிசார் கண்டெடுத்தனர்.

காலியில் ஒரு பெண் இனந்தெரியாத நபர்களால் குத்திக் கொல்லப்பட்டார்.

22.05.90 வீரகேசரி

மலையக மக்கள் மீதான இராணுவ அடக்குமுறை, கைதுசெய்யப்படுதல், கட்டாய நாடுகடத்தல் ஆகியவற்றை எதிர்த்து வடக்கு-கிழக்கில் புலிகளின் மக்கள் முன்னணியின் கர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருவாஞ்சிப் பகுதியில் இலங்கை இராணுவ முகாம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. மட்டக்களப்பு விமானநிலையத்திற்கு அடிக்கடி விமானங்கள் வந்து செல்கின்றன. அத்துடன் விமானப்படை கெலிகள் அடிக்கடி தாழப் பறந்து வேவு பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

திருகோணமலை, பலாலி, யாழ்கோட்டை இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன. புலிகளின் இராணுவபலத்தைக் குறைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. -அன்ரன் பாலசிங்கம்

இலங்கை அகதிகள் அந்தமான்தீவிலேயே இருக்க அனுமதிக்கப்படுவர் என்ற தனது நிலையைக் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இன்னும்கூட ஜனாதிபதி பிரேமதாசவின் நோக்கங்களை நாம் ஆதரிக்கின்றோம். அவர் மீது எமக்கு நம்பிக்கைஉண்டு - புலிகளின் வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர்

25.05.90 உதயன்

குமுதம், துக்ளக், பொம்மை, ஜெமினிசினிமா போன்ற சஞ்சிகைகள் யாழ்நகரில் விற்பனையாவது புலிகளால் தடுக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

"என்ன ஐஸே, இதுக்கெல்லாம் போய் தலையை உடைச்சுக் கொண்டிருக்கிறீர். உயிரோடை இருக்கிறவையளையும், இல்லாதவையளையும் நீர் துணிஞ்சு கொல்லலாம். வேணுமெண்டால் சித்திரவதையும் செய்யலாம். ஏனெண்டா நீர் பத்திரிகையாளன். எங்கடை பத்திரிகா தர்மத்திற்கேற்ப முடிவிலை யாவும் கற்பனை எண்டு போடுறதாலை கோடு, கச்சேரியெண்டு அலையிற தேவை எங்களுக்கு ஒரு நாளும் வராது. ஐமாய்ச்சு விடும் ஐஸே"

ஆசிரியர் போனை வைத்தார். எனக்குள் ஒரு வீரியம் விர்ரென உள்ளிட்டது.

பேனாவைத் தூக்கியவன் எதையும் செய்யலாம். அவன் எதற்கும், எவரிற்கும் பயப்படக் – கூடாது. பத்திரிகா தர்மத்துடன் சம்பந்தப்பட்டதுதான் அவன் செய்யும் கொலை. ஆசிரியர் பிரம்மாவின் தேவமொழிகளை இப்படி மொழிபெயர்த்துக்கொண்டு, எவரை, எந்த மெதேட்டில் கொல்லலாம் என்று சிந்திக்கத் தலைப்பட்டேன்.

நான் ஒரு பத்திரிகையாளன். ஆசிரியர் என்னிடம் எழுதக் கேட்டது சிறுகதை. இலக்கியம் என்ற பேச்சை எடுக்காமல் அதையெழுத வைப்பிக்கும் ஆற்றல் நிறைந்த மேதை அவர்.

உண்மையைச் சொல்லுவதானால் அவரிற்குப் பூப்போட்டு கும்பிடவேண்டும். ஐரோப்பிய தலைநகர்களில் நலமடித்துப் பூக்கவைக்கும் பூக்களைக் கொண்டல்ல. இன்னும் சுத்தமான தமிழில் சொல்லுவதானால் இந்தப் பூக்கள் நாற்றமடிக்காது என்பதால்தான் பூப்போட்டுக் கும்பிடும் எண்ணத்தை உடனடியாகவே நறுக்கியெறிந்துவிட்டேன். நாற்றமடிக்கும் பூக்கள் ஆசிரியரை வணங்க எனக்குத் தேவை.

நாற்றமென்பதினூடாக அவரை நக்கலடிக்கின்றேன் என்று மட்டும் நினைத்துவிட வேண்டாம். நாற்றமென்பதற்கு நறுமணமென்று தமிழில் ஒரு சுத்தமான அர்த்தமுண்டு.

இதை நம்பாதவர்கள் – நாவலர் கதிரவேற்பிள்ளையின் பேரனிடம் சென்றுதான் நான் சொன்னது சரியா, பிழையா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கம்பன் வீட்டுக் கக்கூசும் கவிபாடுமென்றால், நாவலருக்கா ருவின் பேரன் அல்லது பேத்தி பூட்டப் பிள்ளை ஏன் சுத்தமான தமிழ் பேசக்கூடாது. இதை லொஜிக் என்று அங்கீகரிப்பதில் என்ன தவறு.

நான் பத்திரிகையாளனும் இலக்கியவாதி. இல்லையேல் ஆசிரியர் என்னிடம் கொலைசெய்யுமாறு கேட்டிருக்க மாட்டார்.

எனக்கு எதையுமே ஒழுங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவன் ஆக்களை கத்தியால குத்திக் கொல்லுவானாம். அடிச்சுக் கொல்லுவானாம். மண்ணெண்ணெய் ஊத்திக் உயிரோட கொளுத்துவானாம். இப்பிடிச் சனங்களிட்டையிருந்து இவனைப் பற்றி ஏகப்பட்ட புகாருகள்வந்திருக்கு. ஆளை என்ன செய்யலாம்?.

அட! இப்பிடியான ஆக்களைத்தானே எங்கடை ஜனாதிபதி தேடிக்கொண்டிருக்கிறார். பேசாம ஆளை இராணுவத்திலயோ, பொலிசிலயோ சேரச் சொல்லுவம். ஜனாதிபதி எக்கச்சக்கமாய் அள்ளிக் குடுப்பர்

— கின்னன்று.

காகச் செய்துதான் பழக்கம். பத்திரிகைக்கு எழுதினாலும் அதில் ஒரு தரம், காரம் இருக்கவேண்டும். கொலை செய்தாலும் அதில் கலையிருக்க வேண்டும்.

தட்டித் தவறி ஸ்ரொக்காம் மேதைகள்... தாகூருக்குக் கொடுத்த சாமானை எனக்குத் தந்துவிட்டால்.. ஆசை. நப்பாசை....

வானில் தொட்டில் கட்டி என்னைத் தாலாட்டும் ஆசை.. மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காதாம்.. எனக்கு மீசையும் நரைக்கவில்லை, ஆசையும் நரைக்கவில்லை... ஓ! ஸ்ரொக்காமே! உன்னை எனது காலடியில் இழுத்துக்கட்டினால்..

ஆசையாம் ஆசை...... ஸ்ரொக்காமும் மண்ணாங்கட்டியும்... ஸ்ரொக்காமைப் பிறகு பார்ப்போம். நாளை நான் கொலை சுமந்து செல்லாவிட்டால் எனக்குச் சீட்டுக் கிழிபட்டுவிடும். முதலில் கொலை...

ஏ கொலையே!.. என்னால் நீயும், உன்னால் நானும் வாழவேண்டும். கொலை செய்வது கூட வாழ்வதற்காகத்தான்... எல்லா வழிகளாலும் எனது மண்டையைப் போட்டு உடைக்க வெளிக்கிட்டேன்.

ஊர்வசி இன்னும் சாகவில்லை. 23 வயதில் அவளொன்றும் சாகாமலிருப்பது புதினமான விஷயமில்லை. கதையுள் புதினத்தைப் புகுத்த வேண்டுமானால் அவளை இந்த வயதில் சாகவைக்க வேண்டும்.

அவளின் தனிப்பட்ட கதை எல்லோரிற்கும் தெரியாது. எனது காதில் மட்டும் விழுந்தது.

அது ஒரு லவ்பிறேக். பிறேக் போட்டது அவள் அல்ல. அவன். இருவருக்கிடையேயும் தெய்வீகக் காதல் ஏற்பட்டிருக்குமானால் அவன் அல்லது அவள் எப்போதோ தலையைப் போ

www.tamilarangam.net

ட்டிருக்க வேண்டும்.

அவர்கள் செய்ய மறந்ததை நான் இப்போது செய்யப்போகின்றேன். அவனிலும் பார்க்க அவளிற்கு மூன்று வயது குறைவு. நான் அவளைத் தெரிவு செய்தேன். எந்த மெதேட்டில் கொல்லுவது?

கிணற்றுக்குள் விழுத்துவதா?

கழுத்திலே சுருக்குப் போடுவ-தா?

நஞ்சு குடிக்கச் செய்வதா?

நித்திரைக் குளிசை... வேண்டாம். அது சாவிற்கு உத்தரவாதம் தராத சாமான். (1. பிற்குறிப்பைப் பார்க்கவும்.)

எந்த மெதேடைத் தெரிவுசெய்வது என்று தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்தபோது எனக்கு ஊர்வசியிலும், தமிழ் இனத்திலும் வெறுப்பு வந்தது.

முன்பெல்லாம் தமிழரது காதல் வாழ்வில் மரணங்கள் தவிர்க்க முடியாததொன்றாகவிருந்தது. இப்போதெல்லாம் அவைகள் மறைந்துவிட்டதால் தமிழ் பேசும் குமரர்களும், குமரிகளும் காதலிப்பதேயில்லையென்று கருதுகிறேன்.

மரணத்தில் காட்டாத கரிசனை எனக்கு இவர்கள் மீது அருவருப்பையூட்டியதால் ஊர்வசியைக் கொல்லும் திட்டத்தைக் கைவிட்டேன்.

நான் எழுதும் சிறுகதை-யைப் படிக்கும் இலக்கிய விமர்சகர்கள் அது சமகால இலக்கியம் என்று சொல்லிவிட்டு விசிலடிக்க வேண்டும்.

கொலைகளை வைத்து எழுதுவதென்பது சமகால இலக்கியத்திற்கு முரண்பாடானதல்ல. லவ்பிறேக்கோ சமகால இலக்கியத்திற்கு ரற்றா காட்டி விட்டது. அதாவது சமகால பாஷையில் லை.. அவுட் ஒவ் பாஷன் இதையே வேறொரு ஆங்கிலில் (2) பார்த்தால்...

சில மாதங்களிற்கு முன் எனக்குத் தெரிந்த பெட்டையொருத்தி எனக்குத் தெரிந்த பெடியனொருவனைக் காதலித்த விஷயம் எனக்குத் தெரியும்.

திடீரென்று அவள் மனம் மாறி எனக்குத் தெரியாத ஒரு பெடியனைக் காதலிக்க வெளிக்கிட்டாள். உண்மை தெரிந்தால் எனக்குத் தெரிந்த பெடியன் தற்கொலைதான் செய்வான் என்பதைத் தெரிந்த எனக்குத் தெரிந்த பெட்டை விஷயத்தைச் சொல்ல சயனைட்டுடன் எனக்குத் தெரிந்த பெடியனிடம் சென்றாள்.

அவள் சொல்லிய விஷயம் அவன் எதிர்பார்க்காதது. அவன் சொல்லப்போவதோ அவள் எதிர்பார்த்தது.

"நான் தற்கொலைதான் செய்வன்" சொன்னான். அவ்வளவுதான், அவள் பக்குவமாய் சயனைட்டையெடுத்து அவன் முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீட்டியபடி, "நீங்கள் இப்படிச் சொல்லுவியள் எண்டது எனக்குத் தெரியும். அதுதான் சயனைட் – டோடை வந்தனான். அண்ணை இயக்கத்திலைதான் இருக்கிறார். அவரிட்டைக் கெஞ்சிக் கூத்தாடித்– தான் இதை வாங்கிக் கொண்டு வந்தனான். நாங்கள் உங்களுக்குச் சயனைட் தாற விஷயத்தைத் தயவுசெய்து ஆரிட்டையும் சொல்லிப் போடாதையுங்கோ. அண்ணைக்குத் தெரிஞ்சா தங்கச்சி– யெண்டும் பாக்காம நெத்தியிலை பொட்டுத்தான் வைப்பார்" என்றாள்.



ஓவியம் நன்றி: ஆனந்தவிகடன்

அவனோ அவளின் தலைமயிரைப் பிடித்து இழுத்து, கன்னத்தில் இரண்டு பளாஃச், பளாஃச் வைத்துவிட்டு, "போடி எனக்கு வேறை ஆரையும் காதலிக்கத் தெரியாதெண்டோடி நினைச்சுப் போட்டாய். பாரடி, உன்னைவிட திறமான சரக்கொண்டை காதலிச்சுக் காட்டிறன்" என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அவர்களின் யதார்த்தம் கொலை யதார்த்தமாகாததால் நான் இந்த முயற்சியையும் கைவிடுகின்றேன். இவர்களெல்லாம் காதல் செய்கின்றார்களாம்! காதல்!

இயக்கமும், இயக்கப் பெடியன்களுமிருப்பதால் எல்லோ–ராலுமே கைவிடப்பட்டுவிட்டேன் என்ற எண்ணம் எனக்குள் உதிக்கவில்லை.

இயக்கப் பெடியள் நான் முந்தி நீ முந்தியென்று செத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்க–ளைப் பற்றி எழுதுவது நல்லது.

ஆனால் எந்த இயக்கம் பற்றி எழுதுவது? இயக்கப் பேர் போட்டு எழுதினால் ஜேர்னலிஸ்ற் றெண்டும் பார்க்காமல் பொட்டு வைத்துவிடுவான்கள். பேர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போடாமல் அப்படி இப்படியென்று எழுதினால் எப்படியாவது தப்பித்துக்கொள்ளலாம்.

சிலோன் ஆமி கொன்றது என்று எழுதுவதெல்லாம் பழங்கதையாகிப் போய்விட்டது. இந்தியன் ஆமி கொன்றதென்று எழுதுவது நல்லது. அவர்களும் போய்விட்டார்கள்.

இவைகளெல்லாம் சமகாலம் என்ற கோட்டைக் கடந்துவிட்டதனால் இலக்கிய விமர்சன மேதைகள் அவைகள் சமகாலம்தான் என்று முத்திரை குத்தமாட்டார்கள்.

"அந்த" இயக்கம் "இந்த" இயக்கத்தைக் கொன்றதென்று எழுதினால் என்ன? பிச்சையும் வேண்டாம், நாய் வந்து என்னைக் கடிக்கவும் வேண்டாம். பேர் போடாமல் எழுதினாலும் அவங்களுக்கு எந்த இயக்கம் என்று மணத்துவிடும்.

இயக்கங்களோடை முஸ்பாத்தி விடக்கூடாது. கொலையும் செய்ய வேணும். தலையையும் காப்பாத்த வேணும். அப்படியாயின் இயக்கங்களோடு சுரண்டாமலிருப்பதுதான் நல்லது.

ஓ! எனக்குத் தலைவெடிக்கும் போலிருந்தது. யாரை கொலை செய்வது? கொலை செய்வது இவ்வளவு பிரச்சினைக் குரிய விசயமா?

பத்திரிகைத்துறைக்குள் வருமுன் இயக்கமொன்றுக்குள் சென்று ட்ரெயினிங் எடுத்துவிட்டு வந்திருந்தால் இன்று இந்தப் பிரச்சினைக்கே இடமிருந்திருக்காது. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.

எப்படியாவது நான் கொலை செய்தாகவேண்டும். இது எனக்காக மட்டுமல்ல, பத்திரிகைக்காகவும், தமிழ் இலக்கியத்திற்குமாக.

இந்த இலட்சியத்திற்கு உருவம் கொடுக்கும் ஓர்மத்தில் காதுகளை எனது சின்ன விரல்களால் குடையத் தொடங்கினேன்.

மூட் வரவேண்டுமென்றால், தலையைச் சொறிவதும், நகத்தைக் கடிப்பதும், 'பார்' இற்குள் நல்ல நாடு தேடித் தவம் கிடப்பதும்... சர்வதேச இலக்கியவானில் அங்கீகரிக்கப்பட்ட பழக்கதோஷங்கள்.

எனக்கும் இந்தப் பட்டியலிற்கும் எந்தச் சம்பந்தமுமேயில்லை. காதைக் குடைந்தால்தான் எனக்கு மூட்டே வரும். குடைந்தேன். குடை குடையென்றுகுடைந்தேன்.

மூட் வந்தது.. ஆகா.. என்ன அருமையான மூட்டு.... இறங்கு... இறங்கு... றேஸிற்கு ஓடும் குதிரைகளிற்குச் சாராயம் பருக்கி விடுவதைப்போல, எனது மூட்டிற்கும் "கிக்" கேற்றி இறக்கிவிட்டேன்.

(தொடர்ச்சி அடுத்த கலத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய வடிவங்கள்

இந்த நாட்டின் கடுமையான அரசியல் சட்டங்கள், பல விடயங்களிலும் அக்கறை காட்ட முடியாத வேலைப் பளுக்கள், தனிமைச் சோகங்கள் போன்றவற்றிடையேயும் கலை, இலக்கிய முயற்சிகள் வளர்ந்துகொண்டுதானிருக்கின்றன.

நடனம், நாடகம், இலக்கியம் என்ற வரிசையில் இப்போது முதன்முறையாக ஓவியங்களும், சிற்பங்களும் இடம்பெற்றுள்ளமை, இங்குள்ள அகதிகளின் முயற்சிகளுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளன.

"புதிய வடிவங்கள்" என்ற தலைப்பில் இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில், டோற்முண்ட் நகரில் சிவகுமாரனின் சித்திரச், சிற்பக் கண்காட்சி நடைபெற்றது. ஏழு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் 20க்கும் மேற்பட்ட ஓவியங்களும், 10க்கு மேற்பட்ட சிற்பங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.



விடுதலை

ஒரு கலைஞனின் 5 வருட உழைப்புகள் செழுமைப்பட்டிருந்ததைப் பார்க்கும்போது உண்மையிலேயே வியக்காமலிருக்க முடியவில்லை. கலைஞர்களின் மன உணர்வுகளின் முன் சூழ் நிலைகள் சில சமயங்களில் தோற்றுத்தான் போய்விடுகின்றன.

வர்ணங்களால் தீட்டியவை கடுதாசித் துண்டுகளால் ஒட்டப்பட்டவை, பென்சிலை மட்டும்

www.tamilarangam.net

பாவித்து வரையப்பட்டவை, நவீன ஓவியங்கள்... என்று பல வகைகள்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது, சித்திரப் பாடத்துக்குச் சிரமப்பட்டு வரைந்து தள்ளும் தேர்த் திருவிழா, கடற்கரைக்-காட்சி போன்றவைகளை இந்த கண்காட்சியில் பார்த்ததும் சட்டென மனதைக் கவர்ந்துவிடுகின்றன.

நவீன ஓவியங்களைப் பார்த்து புரிந்துகொள்ள முடியாமல் போனபோது, சிவகுமாரனை உதவிக்கு நாடினோம்.

"இவற்றைப் பார்க்கும்-போது உங்களுக்கு மனதில் என்ன தோன்றுகிறது என்று முதலில் சொல்லுங்கள். எதை மனதில் வைத்து வரைந்தேன் என்பதைப் பிறகு சொல்கிறேன்" என்று அவர்

## ஜோசப்

கூறிவிட்டார்.

நானும், என்னுடன் வந்த நண்பர்களும் இயலுமானவரை முயற்சி செய்து பார்த்தோம். எல்லோருக்கும் வெவ்வேறு தோற்றங்களே தெரிந்தன. தலையை இடது பக்கம் சரித்துப் பார்த்தால் ஒரு தோற்றம். வலது பக்கம் சரித்தால் இன்னொரு தோற்றம்.

எங்களுக்குப் பட்டதைச்-சொல்லிவிட்டு சிவகுமாரனிடம்



கேட்டால் அவர் சொன்ன விளக்கம் வேறாக இருந்தது. அதன்படி அதே ஓவியங்களை மறுபடி பார்க்கும்போது அவரின் விளக்கத்திற்கேற்ற மாதிரியே இருந்தது.

உதாரணத்திற்கு 'விடுதலை' என்ற ஓவியத்தைப் பார்க்கையில், அலையடிக்கிறது, பறவைகள் பறக்கின்றன என்று சொன்னோம்

"அந்த ஓவியத்தில் 3 மனிதர்கள் இருக்கிறார்கள். தனது அடிமைநிலையை உணராதவன் தளைகளால் கட்டுண்டு கிடக்கிறான் அடுத்தவன் அதைத் தகர்க்க முயற்சிக்கிறான். அடிமை நிலையையும், அதிலிருந்து விடுபடுவதற்கான சரியான வழியையும் தெரிந்த மூன்றாமவன் போராடி விடுதலையடைந்துள்ளான்" என்று சிவகுமாரன் விளக்கமளித்தார்.

அந்த விளக்கத்துடன் அதே ஓவியத்தைப் பார்க்கும் -போது உண்மையிலேயே ஆச்சரியமாகவிருந்தது. நான்கு சட்டங்களுக்குள் வர்ணங்களால் இத்தனை அர்த்தங்களா!

www.tamilarangam.net

கூடவே இவ்வளவு சிரமங்களையும், உண்மை அர்த்தங்களிலிருந்து விலகிய மாயைத் தோற்றங்களையும் தரும் இந்த வகையான நவீன ஓவியங்கள் புத்திஜீவிகளுக்கும், 'ஏ' கிறேட் பார்வையாளர்களுக்கும்தான் உரியதாக இருக்கின்றனவோ என்பதில், இந்த ஓவியங்களின் பயன்பாடுகள் கேள்விக்குரியதாகிவிடுகின்றன.

இன்னோர் ஓவியத்தில் இரண்டு போராளிகள் இராணுவ உடைகளுடன் காட்சியளித்தார்கள். ஆண் போராளி ஆயுதம் வைத்திருந்தான். பெண் போராளி சமைத்து அவனுக்குச் சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள்.

"பெண் போராளியால் ஆயுதம் வைத்திருக்க முடியாதா? ஆண், பெண் போராளிகள் இணைந்து சமைக்கக் கூடாதா?" என்று கேட்டதற்கு, "பெண்களில்தான் தாய்மை உணர்வு இருக்கிறது" என்று சிவகுமாரன் பதிலளித்தார்.

இதேபோல் "ஏன் பெண்களின் ஓவியங்கள்தான் அதிகமாக இருக்கின்றன? அதுவும் வரவேற்பதைப் போல, விளக்கேற்றுவதுபோல" என்று கேட்டதற்கு, "அவர்கள் ரசனைக்குரியவர்கள். அழகை ரசிக்க வேண்டும். இதுவும் ஒரு அழகுணர்ச்சிதான்" என்று அவர் பதிலளித்தார்.

தாய்மை, ரசனை, அழகு, கவர்ச்சி... என்ற போர்வைகளுள் பெண்ணடிமைத்தனம் மறைக்கப்பட்டிருப்பதை சிவகுமாரன் புரிந்துகொண்டு, இவற்றுக்கெதிரான பெண்களின் செயற்பாடுகளைக் குறிப்பதான ஓவியங்களுக்காக இனிமேலாவது தனது தூரிகைகளைப் பயன்படுத்தவேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.

கண்காட்சி மலரின் எனதுரையில் குத்திக்கொண்டிருக்கும் 'ஆர்வதத்' தொனிப்பையும் தவிர்த்திருக்கலாம். ஒரு கலைஞனை வாழ்த்த பி.ஏ., பி. கொம். கள் போன்றோரே உரித்துடையவர்கள் என்ற 'பாரம்பரியம்' இக் கண்காட்சி மலரிலும் மீறப்படவில்லை.

சிற்பங்களிலும் சிவகுமாரனின் கடின உழைப்புத் தெரிகிறது. கலைமான், அன்னப்பிரவாக பட்சி போன்றவை மனதைக் கவர்கின்றன. (அன்னப்பிரவாகப்பட்சியை இதுவரை நாங்கள் பார்த்ததேயில்லை என்பது வேறு விடயம்.)

"... இன்று நாம் இங்கிருக்கும் நிலையில் எந்நேரமும் நம் நாட்டிற்குத் திரும்பிச்செல்லலாம். அவ்வாறு நாம் செல்லும் வேளையில் நாம் சேர்த்த பொருளைக் கணக்கிட்டுத் திருப்தியடைந்துவிட முடியாது. நம் மண்ணைவிட்டு வெளியில் வாழ்ந்த நேரத்தில் உனது மண்ணிற்கு எதனைச் செய்தாய்? உன் தாய் மொழிக்கும், கலை, கலாச்சாரத்திற்கும் எவ்வகையில் பெருமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைத் தேடிக்கொண்டாய்?என்று ஒவ்வொருவரும் தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவேண்டும் இப்படியாக என்னை நான்கேட்டுக்கொண்டதன் மிகச் சிறுவிளைவே இந்தச் சித்திரச் சிற்பக் கண்காட்சியாகும்....." என்று சிவகுமாரன் கண்காட்சி மலரின் தனதுரையில் அடக்கமாகவும், அக்கறையாகவும் குறிப்பிடுகிறார்.

இயற்கை காட்சிகள், அழகு வடிவங்கள் என்பவற்றுடன் நிறுத்திக் கொள்ளாது, சனங்களுக்காகவும், அவர்கள் பற்றியும் வரைய தனது தூரிகைகளையும் திறமைகளையும் பயன்படுத்தி தனது முயற்சிகளைத் தொடரவேண்டுமென சிவகுமாரனை நட்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

## நமது விமர்சனம்

**சமூகத்தின் மாற்றமென்பது ஒவ்வொரு தனிமனிதனினதும் மனமாற்றமே என்று மங்களேசுவரி குறிப்பிட்டுள்ளார்.**

**'சமூகம்'என்பது உற்பத்தி முறைகளை அடிப்படையாக் கொண்டது. உற்பத்தி முறைகள் மாறும்போது மட்டுமே இதுவும் மாற்றமடைகிறது.**

**உற்பத்தி முறைகளின் மாற்றத்திலேதி- தொடர்ந்து வரும் கலாச்சார மாற்றங்களிலே தனிமனிதர்களின் மாற்றங்களும் நிகழலாமே தவிர தனிமனித மாற்றம் மட்டுமே சமூக மாற்றம் ஆகிவிடுவதில்லை.**

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

களோ முகில்வாணனுடையவை. வசனங்களை மாற்றவும் அவர் ஒத்துழைப்புத் தந்தார். நாடகக் குழுவுக்கும், முகில்வாணனுக்குமான உறவு கட்டுக்கோப்பானது.

நாடகத்தில் குறியீடுகள் பாவிக்கப்பட்டிருந்ததாக தூண்டிலில் விமர்சிக்கப்பட்டிருந்தது. குறியீடுகள் எப்படியும் இருக்கலாம். தூண்டில்தான் புலிகளைக் காட்டிக் கொடுத்தது என்று நாங்களும் சொல்லலாம்.

விமர்சனங்கள் சண்டு முடிவதாக இல்லாமல், வளர்ச்சியை நோக்கியதாக இருக்க வேண்டும்."

இவ்வாறு கூறிய பிலபீல்ட் நாடகக்குழுவைச் சேர்ந்த பாலச்சந்திரன் இக் கருத்துகளைத் தூண்டிலில் வெளியிடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

"திறமையான கலைஞர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர் என்ற கருத்து நாடகத்தில் பங்குகொண்ட கலைஞர்களை மட்டம் தட்டும் நோக்கில் குறிப்பிடப்படவில்லை. இவ்வரிகள் கலைஞர்களின் மனதை நோகவைத்திருக்குமாயின், அவற்றை பிரசுரித்தவர்கள் என்ற ரீதியில் நாம் மனம் வருந்துகிறோம். நாடகத்தின் உள்ளடக்கம் பற்றிய - கோபாலின் கருத்தில் எமக்கு உடன்பாடுண்டு" என்று நாங்கள் பதிலளித்திருந்தோம்.

— கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகம்

## சிறுவர்களுக்கு எதிராக....

பிறேசில்

இந் நாட்டில் நீண்டகாலமாக நடைபெற்றுவரும் கொடுமைகள் தற்போது வெளி உலகின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்நாட்டில் சிறுவர்களுக்கெதிராகப் பயங்கர யுத்தமே நடந்துகொண்டிருக்கிறது. ஆயுதங்கள் ஏந்தாத, அப்பாவிச் சிறுவர்கள் நாளொன்றுக்கு ஒருவர் என்ற வீதத்தில் கொலைஞர்களால் கொலை செய்யப்பட்டுவருகிறார்கள்.

இப் படு பாதகச் செயலைப் புரியும் கொலைஞர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் பொலிஸ்காரர்களே. கொலையைச் செய்வதற்கு முன் இவர்கள் சிறுவர்களை வீதிகளிலும், பொலிஸ் நிலையங்களிலும் வைத்துச் சித்திரவதைக்குள்ளாக்குகிறார்கள்.

பிறேசிலின் தலைநகரான றியோ டி ஜெனய்றோவில் மட்டும் 1989ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஜூலை மாதத்திற்கிடையில் 184 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பது உத்தியோகபூர்வச் செய்தியாகும்.

1989ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் 15 நகரங்களில் சுமார் 735 சிறுவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இக் கொலைகள் பற்றி பிறேசில் பத்திரிகையாளர் ஒருவர் சுமார் 300 பேரிடம் அபிப்பிராயம் கேட்டபோது "குற்றம் புரிந்த அல்லது குற்றம் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுகின்ற சிறுவர்களைக் கொலை செய்வதே அவர்களுக்குரிய தண்டனையாகும்" என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

றியோ டி ஜெனய்றோவின் அரச செயலகர், "சிறுவர்களை கொலை செய்யும் நடவடிக்கைகளில் பொலிசாரும் உடந்தை-

www.tamilarangam.net

யாகவுள்ளனர் அல்லது நேரடியாகப் பங்கேற்கின்றனர்" என்று ஒத்துக் கொண்டுள்ளார்.

தொழிற்சாலைகள் நிறைந்த சௌபௌலோ, றியோ, றிசீவ, விற்றோறியா போன்ற பகுதிகளில் வியாபாரிகள், தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் — போன்றோர் தெருச் சிறுவர்களைக் கொலை செய்வதற்காக பொலிஸ்காரர்களுக்கும், கொலையாளிகளுக்கும் பணம் வழங்குகின்றனர். "குற்றவாளிகளிலிருந்து எங்களைப் பாதுகாக்கவே நாம் நிதியுதவி வழங்குகிறோம்" என இவர்கள் கூறுகிறார்கள்.

"ஒரு பொலிஸ்காரரை விட நாங்கள் இப்போது இக்கொலைகளால் அதிக வருமானத்தைப் பெறுகின்றோம். கடையொன்றில் ஒரு சிறுவன் களவெடுக்கின்றான். அவனை எதுவும் செய்யாது விட்டால், பிறகு வேறு ஒரு சிறுவனும் வந்து களவெடுக்கின்றான். இதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்காவிட்டால் எங்களுக்கு வருமானம் இல்லாமல் போய் விடும். அதனால் கொலை செய்கிறோம்" என்பது கொலைஞர்களின் பதில்.

அரசாலும், சமூகத்தாலும் புறக்கணிக்கப்பட்ட 27 மில்லியன் சிறுவர்கள் வீதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ அரசமைப்பால் அனாதைகளாக்கப்பட்டு, தெருவுக்கு விரட்டப்பட்டுள்ள இந்தச் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் பதில் மரணம்.

இதுதான் இன்றைய உலகம்.

ர/ந. நி

(40ஆம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணையும்
உன்னையும், உறவையும்
பிரிந்ததில்
கானல்நீரைப் பருகவும்
பாலை மணலில் தூங்கவும்
முடிகிறது.

முகமே
மௌனம் போர்த்திரு.

செயல்களில் பேசுவோம்
எரித்தவர் பற்றி.

அவரை
எரிப்பது பற்றி.

— சிவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேசும் மௌனம்

சகாராவின்
சுடுமணலில் ஓடிக் களைத்த
என் கனவுகளுக்கு
ஒரு தண்ணீர்ப் பந்தலாய்
அறிமுகமானவள்
நீ.

உன்
மௌனப் பிரம்பு முறிந்ததும்
நீ
வார்த்தைச் சிராய் எறிந்ததும்
ஒரு யுகத் தூக்கத்தின்
விழிப்பல்லவா?
இதழ்கள் காய்ந்து
இமைகள் நனைய
இளமை உலரும்
தனிமையுடல்களாய்
இன்று நாம்.

இடைவெளி நெருப்பில்
எரிவது நாம்.
எரித்தது யார்?

கானலில் முளைவிடத் தெரிந்த
உனக்கு
பாலையில் இலை விரிக்கவும்
விரிக்கவும் தெரியும்.

எனக்கு?

நீ கற்றுக்கொண்டிருக்கவும்
நான் இற்றுக்கொண்டிருக்கவும்
நமக்கான
எத்தனை நாட்களை இழப்பது?

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசத்தின் குறிப்புகள்

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் புலிகள் தரப்பினரால் வலியுறுத்தப்பட்டுள்ள 6வது திருத்தச் சட்ட நீக்கமும், மாகாண சபைக் கலைப்பும் அரசியல் அவதானிகள் மத்தியில் கவனிப்பைப் பெற்றுள்ள முக்கிய விசயங்களாகும்.

இந்த இரு விசயங்களிலும் இலங்கை அரசு விட்டுக்கொடுக்காதவரை தாம் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்வது என்பது சாத்தியமில்லை என்று புலிகள் அறிவித்துள்ளார்கள்

பிரேமதாச மிகவும் கண்ணியமானவர் என்றும், அவர் தமிழ்மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் இதயசுத்தியுடன் ஈடுபட்டு வருகிறார் என்றும் கூறிவந்த புலிகள் இலங்கையரசுக்கும், ஈ. பி. ஆர். எல். எவ். வுக்குமிடையில் கடந்த மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தை-யைத் தொடர்ந்து, சற்று வித்தியாசமாகப் பேசத் தொடங்கினார்கள்.

பிரேமதாச தடுமாறுகிறார், தெற்கிலுள்ள இனவாதிகளின் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் நழுவுகிறார், தேவையற்றவிதத்தில் மக்களால் நிராகரிக்கப்பட்ட துரோகிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இவர் இப்படிப் போனால் இலங்கை அரசுடன் எந்தவகையான யுத்தத்திற்கும் நாம் தயாராக இருக்கிறோம் என யாழ்ப்பாணத்தில் பாலசிங்கம் தெரிவித்ததைத் – தொடர்ந்து ஒருவகை 'இறுகல்' நிலை ஏற்பட்டது.

அவசரஅவசரமாக அமைச்சர் ஹமீதை அனுப்பி ஒருவகை அவசர உடன்பாட்டுக்கு வந்த அரசு, ஈ. பி. ஆர். எல். எவ்வுடனான பேச்சுவார்த்தையை அவ்வளவு சீரியசாக எடுக்க வேண்டாம் என அறிவித்து விட்டு புலிகள் பிரதித் தலைவர் மாத்தையாவை கொழும்புக்கு அழைத்துப் பேசத் தொடங்கியது.

இந்தப் பேச்சில்தான்மேற்படி இருவிடயங்கள் தொடர்பாகவும் அரசு ஒரு தீர்மான

www.tamilarangam.net

மான முடிவை அறிவித்துள்ளது. அதாவது 6வது திருத்தச் சட்டத்தை நீக்குவது, மாகாணசபையை கலைப்பது என்பனவே அவை.

ஆனால் இந்த மாகாண சபையைக் கலைப்பது என்றவிவகாரத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு சட்டபூர்வமான அதிகாரங்கள் இல்லாததால், அரசியல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வருவதன் மூலம் அந்த அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

## பிரஜைகள்

மாகாணசபை என்பது எந்தவிதமான அதிகாரமும் அற்ற ஒரு சபை என விமர்சிக்கப்பட்டபோதும், அரசால் நினைத்தமாத்திரத்தில் கலைக்கப்படக்கூடியதாக இல்லாமல் இருப்பது ஒருவகையில் அதற்குப் பாதுகாப்பானதே. இதைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் கொடுப்பது என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை தமது தலையில் குட்டுவதற்கு ஜனாதிபதிக்கு அனுமதியளிப்பதற்குச் சமமாகும்.

சிங்கள இனவாதம் இன்னமும் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு நாட்டில் ஆகக்குறைந்தது ஒரு மாகாணசபையாவது தமிழ் மக்கள் சார்பில் குரல்கொடுக்கும் 'நெஞ்சுரத்தையே' முற்றாக அடகு வைப்பதற்கு இது வழிவகுக்கும்.

ஆனால் விடுதலைப்புலிகளோ இதைப்பற்றி அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுனப்பிழையாக இருக்கவேண்டும் என்ற நிலைதான் இது.

திலீபனின் உண்ணாவிரதத்திற்கு முன்பாக, விடுதலைப்புலிகளால் பிரேரிக்கப்பட்ட மூவரில் தாம் விரும்பிய ஒருவரை நியமிக்காது, ஜே.ஆர் தனக்கு விருப்பமான ஒருவரை நியமித்தார் என்பது ஒரு பிரச்சினையாகக் கூறப்பட்டது.

இது தமிழ் மக்கள் தமது கவர்னர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை மறுக்கும் செயல் எனக் கூறப்பட்டது. ஆனால் இப்போது தமிழ் மக்களுக்கு வரப்போகும், புலிகள் தாமே நாளை ஏற்கப்போவதாகச் சொல்லும் மாகாணசபைக்கு அதிகாரம் இல்லாமல் செய்யவேண்டும் என்பதில் தீவிரமாகவிருக்கிறார்கள். இந்த முரண்பாட்டின் வேடிக்கையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால் 6வது திருத்தச் சட்டம் நீக்கப்படுவதில் புலிகள் காட்டும் உறுதி மிகவும் கவனிக்கப்படக் கூடியது.

முதலில் கூட்டணியும், பின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னர் ஈரோஸும் பதவிகளுக்கா க சோரம்போன இந்த 6வது திருத்தத்தை எதிர்ப்பதில் புலி கள் மிகவும் அக்கறையாக இரு க்கவே செய்கிறார்கள்.

ஆனால் தனது சோரம் - போன வரலாற்றை மறைக்க முண்டியடித்துக்கொண்டு, தான் ஒரு தனிநபர் பிரேரணையைக் கொண்டுவரப்போவதாக ஈ ரோஸ் அறிவித்துள்ளது.

இந்தப் பிரேரணை பா ராளுமன்றத்தில் வெற்றி பெறுவி ட்டால் அவர்கள் பாராளுமன்ற த்தைவிட்டு வெளியேறிவிடுவார்க ளாம். பாராளுமன்றத்தில் இத் தனைநாள் ஈரோஸ் எதனைச் சாதித்தது? என்ன செய்தது? அது வெளியேறுவதால் யாருக்கு நட் டம்? என்றெல்லாம் கேட்டு வி டாதீர்கள்.

என்றாலும் இதில் ஏதாவது விசயம் இருக்குமென்று நான் நினைத்து எனது நண்பனிடம் கே ட்டேன். அவன் சொன்னான்:

"உனக்குத் தெரியாதா? பாலாவும், பிரபாவும் பேசியபி ன்னர்தான் இந்த முடிவு எடுக்க ப்பட்டுள்ளது. புலிகளின் கொள்- கைக்கு அனுசரணையாக நடக்கு ம்படி ஈரோஸைப் பிரபா பணி த்துள்ளதாக பேப்பரில் வந்த செய்தியை நீ பார்க்கவில்லை- யா?"

புரிந்தது என்று தலையா ட்டினேன் நான்.

"இன்னுமொன்று கேள்விப் படவில்லையா" என்று அவன் கேட்டான்.

"என்ன?" என்றேன் நான்

"மாகாணசபையைக்கலை க்க அரசுக்கு அதிகாரம் வழங் காமல் தடுக்க உள்ள ஒரேவழி ஈ. பி. ஆர். எல். எவ். தானாகவே கலைத்துவிடுவதுதான் என்று பாலகுமார் கூறியிருந்தாரே க வனித்தாயா?"

"கவனித்தேன்"

"ஈரோஸின் பச்சோந்தி தனத்துக்கு இதைவிட்டால் வேறு உதாரணம் தேவையில்லை"

"எனக்குப் புரியவில்லை"

"சட்டபூர்வமானதாகத் தெரிவுசெய்யப்பட்டதாக இலங் கையரசால் அங்கீகரிக்கப்பட்ட மாகாணசபையைப் பாதுகாக்க இலங்கையரசு ஒரு நடவடிக்கை யும் எடுக்கவில்லை. மாகாண சபை சட்டபூர்வமானதல்ல என புலிகள் சொல்வதில் ஒரு நி யாயம் இருக்கிறது. ஆனால் அரசு க்கும் அப்படியா? அப்படியானால் அரசல்லவா முதல்வேலையாகப் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும்? அதையும் சட்டவிரோ தமானதென்று அறிவிக்க வேண் டும்? இந்த ஈரோஸ் வெற்றி பெற்ற தேர்தல் மட்டும் ஒழுங் காக நடந்ததா? அவர்களுமல்ல வா பதவி விலகவேண்டும்?"

"அதுதானே?"

"இந்தியாவுடன் கூடிக் குலவியது ஈ. பி. ஆர். எல். எவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டும் செய்த குற்றமல்லவே. ஈரோஸ் கூடிக் குலாவவில்லையா? றோவைக் கூட்டி வரவில்லையா? காசு, ஆயுதம் வாங்கவில்லையா? இப்போது யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டம் நடாத்தமுடியாமல் மலையகத்தில்போய் நடத்துகிறதே, அந்தளவுக்கு ஜனநாயகம் அதற்குப் போதுமாகிவிட்டதா? எல்லாம் போகட்டும், குறைந்தபட்சம் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வை தங்களுடன் தேர்தலில் போட்டியிடவருமாறு ஆவது சவால்விட்டிருக்கலாமே?"

"விழுவிறென்று பேசுகிறாய் புரியவில்லை"

"எனக்கு விழுவிறென்று ஏறிது"



என்ன கனக்க யோசிக்கிறியள்?

ஒண்டுமில்லை. அந்தக் காலத்து ராமாயணம் இந்தக் காலத்தில நடந்தால் எப்பிடி இருக்கும் எண்டு யோசிச்சுப் பாத்தன்.

எப்பிடி இருக்கும்?

எப்பிடி இருக்குமோ! அசோகவனத்து சீதை ஆயுதக்குழுக்களால கடத்தப்பட்டு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருப்பாள். எட்டப்பன் எண்டு சொல்லி அனுமானை கம்பத்தில தூக்கியிருப்பினம். கடைசியா தப்பியோட முயன்ற குற்றத்திற்காக எண்டு சொல்லி சீதையும் சுடப்படுவாள். அமெரிக்காவுக்குப் பயந்து ராமர் வாய்மூடிக் கொண்டிருப்பார்.

— விமல்

*******************

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த பத்திரிகையான 'திசை' புலிகளால் தடைசெய்யப்பட்டுள்ளது. அதை வெளியிட்ட புதுயுகப் பதிப்பகத்தின் அச்சகம் புலிக்குத் தேவைப்பட்டதைக் காரணமாகச் சொல்லுகிறார்கள்.

உண்மை, பொய் தெரியவில்லை.

ஆனால் யாழ்ப்பாணப் பத்திரிகைகளிடையே யார் அதிகம் புலிக்கு துதிபாடுவது என்பதில் நிறையப் போட்டியும், அதில் அவற்றுக்குப் பூரண சுதந்திரமும் இருந்தது.

'கள்ளன் போன பிறகு விசுவன் பொல்லை எடுத்தானாம்' என்ற கதையாக, திசையும் தன் பங்குக்குப் புலி சார்பாகவும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வையும், இந்தியாவையும் சாடியும் எழுதிக் கொண்டிருந்தது.

ஆயினும் அது தடைசெய்யப்பட்டுவிட்டது. தலைவர் பிரபாவால் "எங்கடை திசை" என அன்பாக அழைக்கப்பட்ட பத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிகைக்கு இது மாதிரி நடந்தது
ரியப்பாகத்தான் இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆட்சியில் இருக்கையில் அனைத்துப் பத்திரிகைகளையும் தடைசெய்திருந்த காலம் ஞாபகத்துக்கு வரலாம். அப்போது அவர்களது 'விடுதலை' மட்டுமே வெளிவந்துகொண்டிருந்தது.

ஆனால் 'திசை' தடை செய்யப்படவில்லை.

மற்றைய தினசரிகளின் ஆசிரியர்களும், ஊழியர்களும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் தடையுத்தரவால் பட்டினியால் வாடியபோதும் அந்தநிலை அதிகநாள் நீடிக்கவில்லை.

இந்தியப்படை வெளியேறத் தொடங்கியவுடன் நிலைமை திருந்திவிட்டது. பத்திரிகைகள் திரும்ப வெளிவரத் தொடங்கின. எனவே அந்தப் பத்திரிகைகளுக்கு புலிகளின் ஆதரவு இருப்பது 'நியாயமே'! ஆனால் திசை?

இது தன்னை ஒருபோதும் தடைசெய்யாத ஈ.பி.ஆர்.எல்எவ்.வைத் தாக்கத் தொடங்கியது 'நன்றிகெட்ட' செயலோ?

இதை அறிந்துதானோ என்னவோ (?!) புலிகள் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்.

கண்டியரசன் கதையை அல்லது பூதத்தம்பி விலாசக்கூத்தை தெரிந்தவர்களுக்கு இந்த நடவடிக்கையை ஆழமாக இரசிக்க முடியும்.

பத்திரிகைத் தடைக்காக யாருமே சந்தோசப்பட முடியாது. நானும் சந்தோசப்படவில்லை. சந்தர்ப்பவாதம் பெற்றுக்கொள்ளும் பரிசு பற்றியே சொன்னேன்.

**********************

துணுக்காயில் பழைய நெற்சந்தைப்படுத்தும் சபை தற்பொழுது புலிகளின் மறியல்சாலையாகப் பாவிக்கப்படுகிறது. இதுபோல் வேறு சில இடங்களிலும் மறியல்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் புலிகளால் கைது செய்யப்பட்ட — ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ, புளொட் உறுப்பினர்களும், 'வாய் திறந்து' பேசியவர்களுமாக சுமார் நாலாயிரத்துக்கும் மேற்பட்டோர் மேற்படி சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

காணாமல் போனதாகச் சொல்லப்பட்ட பத்திரிகையாளர்களான எஸ். செல்வராசா (5 பிள்ளைகளின் தந்தை), ஐ. சண்முகலிங்கம் ஆகியோரும் இச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக கதைத்துக் கொள்கிறார்கள்.

இந்தச் சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் ஒருவரோடொருவர் கதைக்க முடியாதாம். வாய் திறந்தால் 'ஜனநாயக நீரோட்டம்' பாழாய்ப் போய்விடுமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாசிசம்: (Fascism)—முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் முதலாளித்துவ நாடுகளில் தலைதூக்கிய அரசியல் போக்கு. ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் மிகவும் பிற்போக்கான, மிகுந்த ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த சக்திகளின் நலன்களை இப்போக்கு பிரதிபலிக்கிறது. ஆட்சியதிகாரம் பெறும் பாசிசம் இச்சக்திகளது அப்பட்டமான பயங்கரவாத சர்வாதிகாரமாகும். மித மிஞ்சிய தேசிய வெறியும், நிறவெறியும், கம்யூனிஸ்டு-எதிர்ப்பும், ஜனநாயக சுதந்திரங்களது ஒழிப்பும், சமூக வாய்வீச்சும், குடிமக்களது பொது வாழ்வின் மீதும் தனிப்பட்ட சொந்த வாழ்வின் மீது கண்டிப்பு வாய்ந்த கட்டுப்பாடும் பாசிசத்துக்குரிய குணாதிசயங்கள் ஆகும். ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கும் ஏகாதிபத்திய வழியிலான நாடு பிடித்தலுக்குமான கொள்கைதான் பாசிசம் பின்பற்றும் அயல்துறைக் கொள்கை.

முதலாவது பாசிஸ்டு ஆட்சி 1922-ல் இத்தாலியில் நிறுவப்பட்டது. 1933-ல் ஜெர்மனியிலும் 1939-ல் ஸ்பெயினிலும் பாசிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தனர். இரண்டாம் உலக யுத்தத்தில் (1939-45) பாசிஸ்டு அரசுகளின் கூட்டுக்கு ஏற்பட்ட இராணுவத் தோல்வியைத் தொடர்ந்து இத்தாலியிலும் நாஜி ஜெர்மனியிலும் பாசிஸ்டு ஆட்சிகளும் பாசிஸ்டு பாணியில் மற்றும் பல நாடுகளில் இருந்த ஆட்சிகளும் தகர்ந்து போயின. 1974 ஏப்ரலில் போர்த்துகலில் பாசிஸ்டு ஆட்சி கவிழ்க்கப் பட்டது; 1967 ஏப்ரல் முதல் கிரீஸில் இருந்த பாசிஸ்டு ஆட்சி 1974 ஜூனில் தகர்ந்து போயிற்று; பிரான்கோ இறந்தபின் (1975 நவம்பர்) ஸ்பெயினில் பாசிஸ்டுஆட்சி வீழ்ச்சியுற்றது—இந்நிகழ்ச்சிகள் யாவும் இன்றைய சூழ்நிலைமையில் பாசிஸ்டு ஆட்சிகள் எவ்வளவு பலவீனமானவை என்பதற்குச் சான்றுகளாகும். ஆயினும் சிலியில் 1975 செப்டம்பரில் இராணுவ பாசிஸ்டுகள் நடத்திய ஆட்சிக் கவிழ்ப்பும், பல நாடுகளில் பிற்போக்குவாத ராணுவ வட்டாரங்களுக்கு உள்ள செல்வாக்கும், தென் ஆப்பிரிக்கக் குடியரசிலும் நமீபியாவிலும் நடைபெறும் நிற வெறி ஆட்சியும் இன்னோரன்ன பிறவும் உலகின் பல பிராந்தியங்களில் இருந்து வருகிற கடுமையான பாசிஸ்டு அபாயத்தைத் தெளிவு படுத்துகின்றன. பாசிஸ்டு-எதிர்ப்பு சக்திகளது ஐக்கிய அணி நிறுவப்படுவது அவசியமாகும். பாசிசத்துக்கு இந்த ஐக்கிய அணி மிகப் பெரிய தடை மதிலாகும்.

— அரசியல் சொற் களஞ்சியத்திலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.


ஜூன் 1990 இலம்: 30

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்



முகவரி ............ THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633


## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மனி: 6 மாதங்கள் ... 20,- டி.எம்
1 வருடம் ... 38,- டி.எம்

வங்கி முகவரி: Stadtsparkasse
Dortmund.
கிளை இல: BLZ 440 501 99
கணக்கு இல: 571 001 799

---

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் ... 25,- டி.எம்
1 வருடம் ... 48,- டி.எம்ம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் ... 50,- யு.எஸ்.டொலர்

தபாற்கந்தோர் முகவரி: Postscheckamt
Dortmund
கிளை இல: BLZ 440 100 46
கணக்கு இல: 308 074 68

குறித்த சந்தாவுக்கான உங்கள் நிதியை தூண்டில் முகவரிக்கு அனுப்பி வைத்ததும் அது குறித்த கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்புதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ள உதவலாம்.

நன்றி.


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் பிறந்தபோது
என் மண்ணில்
ஆயுதங்கள் இருக்கவில்லை.

இப்போது
ஆயுதங்களைத் தவிர
வேறேதும் இல்லை.

பால் வடியும் முகத்தில்
கொலை பூசி
இருட்டாக்கி ....

என் கையில் இருக்கும்
துப்பாக்கி
என் சொல்லைக்
கேட்பதில்லை.

அது கூட
"அவன்" அசைந்தால் ...?